## அத்தியாயம் 10

# நடத்தையும் மனச்சாட்சியும்

மாயையான தெய்வங்களுடைய கோவிலில் விக்கிரங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உட்கொள்ளுவதற்கு ஆதரவாகப் பேசுகிறவர்கள், பவுலின் எதிர்க்கணைகளை இரண்டு விதத்தில் எதிர் கொள்ள வேண்டியிருந்தது: (1) மிகத் திறமையான வரையறைகளும், அறிவுக்கான ஆவல்களும் தனக்கே பெயர் ஏற்படுத்திக் கொண்டவர்கள் செய்து வந்தவைகளை மாற்றியமைக்க முடியாதபடி காணப்பட்டது. எந்த அறிவிற்கு ஏற்புடையதான முறையின்படியும், விக்கிரகக்கோவிலில், விக்கிரத்திற்குப் படைக்கப்பட்ட உணவைப் புசிப்பதும், அந்த உணவின் ஒரு பாகமாக நடத்தப்படும் சடங்காச்சாரங்களில் கலந்து கொள்வதும், பொய்யான தெய்வத்தைத் தொழுவதற்குச் சமானமாகும். அம்மாதிரியான செயல்பாடுகள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிதலோடு ஏற்புடையாத அமைவதில்லை. (2) மனதளவில் பக்குவமும், பாதுகாப்பும் உள்ள அறிவு படைத்தவர்கள் விக்கிரக ஆராதனையினின்று தங்களை விலக்கிக் கொண்டதாலும், விசுவாசத்தில் பலவீனமான கிறிஸ்தவர்கள், ஏற்றப்படியான வேறுபாட்டுச் சிறப்பியல்புகளை நடைமுறைப்படுத்த இயலாத நிலையிலுள்ளார்கள்; ஒன்றில் பலவீன விசுவாசிகள் கிறிஸ்துவை ஒதுக்கி விடுவார்கள், ஏனெனில் கிறிஸ்தவர்களிடையே காணப்பட்ட மாயாஜாலத்தை அவர்கள் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை அல்லது அறிவு படைத்தவர்கள் மனதளவிலான ஒதுக்கீடு இன்றி தாங்கள் உரிமையாகக் கருதிக்கொண்ட அதே உணவில் அவர்களும் கலந்து கொள்வார்கள். தங்களுக்கு அறிவு உண்டு என நினைத்துக் கொள்பவர்கள் விசுவாசத்தில் பலவீனமானவர்களை பாவத்துக்கு வழிநடத்துவார்கள்.

அவர்கள் கூறுவது சரியென்று காணப்பட்டாலும், அறிவு படைத்தவர்கள் விக்கிரகக்கோவிலில் விக்கிரகத்திற்குப் படைக்கப் பட்டதைப் புசிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். பலவீன சகோதரர்களின் ஆத்துமாக்கள், உரிமைகளை நிலைநாட்டுவதை விட அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளவையாகும். அப்போஸ்தலன் (பவுல்) அத்தியாயம் 9ல் தன்னையே எடுத்துக்காட்டாக பயன்படுத்தியுள்ளார். சுவிசேஷத்தின் காரியத்திற்கான நிதி உதவியின் மேலுள்ள தனது உடைமைகளை அவர் ஓரங்கட்டி விட்டபடியால், அறிவு படைத்த கிறிஸ்தவர்களும் விக்கிரக ஆராதனையில் கலந்து கொள்வதற்கான

உரிமை தங்களுக்கும் உண்டு என தாங்கள் சாதிக்கிற உரிமைகளை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். தனது கருத்தை நிலைநாட்டிய நிலையில், பவுல் தனது முதலாவதான உறுதி நிலைக்குத் திரும்புகிறார். அது என்னவெனில், அறிவு படைத்தவர்கள் மனதளவில் தங்களைக் காத்துக் கொள்ளவும், விக்கிரகாராதனையைப் பற்றிய குற்ற உணர்வு கொண்டுள்ளார்கள். அத்தியாயம் 8ல் சொல்லப்பட்ட கருத்துக்கு அத்தியாயம் 10லிலும் திருப்புகிறோம். விசுவாசத்தில் பலவீனமானவர்கள் மேல் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், விக்கிரககாராதனையின் சடங்காச்சாரங்களில் பங்கு பெற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் பாவம் செய்கிறார்கள்.

## “இஸ்ரவேலை நினைத்துக்கொள்ளுங்கள்” (10:1-5)

**1இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய
வேண்டுமென்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல் லாரும்
மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய்
நடந்து வந்தார்கள். 2எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும்
சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். 3எல்லாரும்
ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். 4எல்லாரும் ஒரே
ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச்
சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்.
அந்தக்கன்மலை கிறிஸ்துவே, 5அப்படியிருந்தும் அவர்களில்
அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, ஆதலால்
வனாந்திரத்திலே அவர்கள் அழிக்கப் பட்டார்கள்.**

**வசனங்கள் 1, 2.** ரோமப்பேரரசின் வணிகமையங்களில் சிதறடிக்கப்பட்டிருந்த யூதர்கள், யூதர்களல்லாத மக்களிடம் எந்த அளவில் கலந்து வாழவேண்டும் என்பதன் வரையறைப்பற்றிய வேறுபாடான கருத்துக்களைக் கொண்டிருந்தார்கள். அந்நிய தெய்வக் கலாச்சாரத்தின் மத்தியில் சிலர் பிறரைவிட அதிகமான அளவில் கலந்து காணப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் வளம்நிறைந்த வணிகர்களாகவும் திறமையுள்ள தொழில் நிபுணர்களாகவும் மாறியிருந்தார்கள். காலம் கடந்த போது, இந்த வணிகர்களும், தொழில் நிபுணர்களும் தங்களது வர்த்தக ஆதாயத்தைப் பெருக்கும் காரியங்களில் தங்களையும் பொருத்தி அமைத்துக் கொண்டார்கள். பவுல் கொரிந்துவிற்கு வந்து சேரும் முன்னதாக, கிரேக்க ஆலயங்களில் சந்தித்த வர்த்தக அமைப்புகளில் யூதர்கள் பலவருடங்களாக ஒன்றிக்காணப்பட்டார்கள். தங்கள் உடன் பணியாளர்களோடு இணைந்து, அவர்கள் சட்ட சம்பந்தப் பட்ட காரியங்கள், லாபகரமான பொருளாதார நிலைமைகள் போன்ற காரியங்களைப்பற்றிய பேச்சு

வார்த்தைகளில் ஈடு பட்டிருந்தார்கள். அந்நிய தெய்வங்களின் ஆலயங்களின் உணவு நேரங்களில் சந்தித்து, உரையாடிக்கொள்ள வேண்டியதின் அவசியத்தை அவர்கள் காரணங்காட்டி விளக்கினார்கள். இந்தத் திறந்த மனப்பான்மை கொண்ட மக்கள் பிறர் பலரை விட சுவிசேஷத்திற்குத் தங்களை அளித்து, அதைக் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்ததை பவுல் கண்டு கொண்டிருந் திருக்கலாம், ஆயினும் அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களான போதும், இந்தப் பொதுவிருந்துகளில் தொடர்ந்து பங்கெடுத்துக் கொண்டிருந் தார்கள்.

விக்கிரகக் கோவில்களில் உணவு எடுத்துக்கொள்வதற்கான உரிமை கொண்டாடும் யூதக்கிறிஸ்தவர்கள், திருச்சபையினுள் இரண்டு காரணங்களுக்காக மதிக்கப் பட்டிருக்கலாம். ஒன்று, யூதர்களான அவர்களிடம் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றிய அறிவு, புறஇனக்கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிகமாகக் காணப்பட்டது. இரண்டாவது, நல்ல வசதிப்படைத்த வணிகர் களான அவர்களில் அநேகர், தங்களது வீடுகளை திருச்சபை கூடும் இடங்களாக அளித்தது மாத்திரமல்லாமல் சபையாரின் தேவைகள் சந்திக்கப்படவும் பலவிதங்களில் தங்களது பங்கை ஆற்றினார்கள். **நமது பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாகக் கடந்து வந்தார்கள்** என்று பவுல் எழுதின போது, அவர் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டிருந்த குலம் சார்ந்த யூதர்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார் (காண்க ரோமர் 9:3). “நமது” என்ற பெயர்ச்சொல்லில் கொரிந்து பட்டணத்திலுள்ள யூதக்கிறிஸ்தவர்களும் அடங்கியுள்ளதாகத் தெரிகிறது 9:9ல் நியாயபிரமாணத்தினின்று கொடுக்கப்பட்ட விளக்கம், புறஇனத்தவரை விட, யூதர்களிலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு அதிகக் கட்டாயமானதாக அறியப்பட்டிருந்தது.

“கொரிந்தியரில் சிலர், கடவுளின் முன்பாக அவர்களது நிலை பிரிக்கமுடியாத சில உரிமைகளை அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது என்றும், அந்த நிலையில் அவர்கள் எந்தத் தாக்குதலுக்கும் ஆளாகாதபடி உறுதியாக உள்ளார்கள் என்றும் எண்ணிக் கொண்டுள்ளார்கள்” என்று Carl Holladay[1] குறித்து வைத்துள்ளார். புராதன யூதர்கள் தங்களில் பெருமிதம் கொள்வதற்கு ஏதுவான நிலையில், அவர்களின் விருப்பமான நிலையில் வேரூன்றிக் காணப்பட்டார்கள் என்று ஹாலடே சுட்டிக் காட்டுகிறார். அதே நேரம், கொரிந்துவின் யூதக்கிறிஸ்தவர்களுக்கே பவுல் உரையாற்றிக் கொண்டிருப்பதை விளக்குவதில் அவர் வெற்றிகாணவில்லை. இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபோது, தண்ணீரில் மூழ்கியிருந்தார்கள் (யாத். 14:21, 22) என்பது பவுலின் விவாதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. எகிப்தியரின் சேனையிலிருந்து, கடவுளின்

மக்களைப் பிரித்த மேகம் அவர்கள்மேல், தொடர்ந்து சென்று கொண்டிருந்தது, தண்ணீரின் சுவர்கள் இருபக்கங்களிலும் உயர்ந்து நின்றன.

எகிப்தின் அடிமைத்தனத்தினின்று மக்கள் கடந்து சென்று, சீனாய் வனாந்திரத்தின் சுதந்தர நிலைக்குச் சென்ற அதே கானம், இஸ்ரவேலர் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டதை சுருக்கமாகத் தெரிவிக்கிறது, புதிய தேசம் ஒன்று பார்வோனின் பார்வை யிலிருந்து கடவுளின் பார்வைக்கு, அவரது ஊழியக்காரனான மோசேயின் மூலமாக பயிற்சி பெற்றுக் கடந்து சென்றது. பாவத்தின் அடிமைத்தனத்தினின்று இஸ்ரவேலின் நகர்வு கிறிஸ்துவின் சுதந்திரத்துக்குச் செல்லும் ஒப்புடைமையை பவுல் எவ்வாறு கையாளுகிறார் என்பது சரிவர அறியப்படவில்லை; ஆயினும், சிவந்த சமுத்திரத்தைக் கடந்து செல்லும் நிகழ்வை அவர் இஸ்ரவேலின் மையப் பொருளாகக் காண்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது. சிவந்த சமுத்திரத்தைக் கடந்து செல்வது இஸ்ரவேலின் கடவுளோ டுள்ள நிலையை மாற்றி விடுவதுபோல, அவிசுவாசிகளிடமிருந்து இரட்சிக்கப் பட்டவர்களைப் பிரிப்பதும் ஞானஸ்நானம் எனப்படும் அளவேயாகும். கடவுளின் ஊழியக்காரனான மோசே நியாயப் பிரமாணம் வழங்குபவராக ஆகிவிட்டிருந்தார்; இஸ்ரவேலர் அவருக்குக் கணக்குகொப்புவிக்க வேண்டும். இஸ்ரவேலின் சரித்திரத்திலுள்ள முக்கிய நிகழ்வுகளை கிறிஸ்துவின் போதனைகளின் முன் நிழலாகக் கண்டு, பவுல் சொல்வதென்னவென்றால், **தேசம் மோசேயில், மேகத்தினுள்ளும் கடலினுள்ளும் ஞானஸ்நானம் பெற்றுள்ளது**.

*சிவந்த சமுத்திரத்தில் நடந்த நிகழ்வில்* **எல்லோரும்** (πάντες, *pantes*) பங்கு பெற்றுள்ளார்கள் என்பதை நான்கு வசனங்களில் ஐந்து தடவைகளாக பவுல் அடிக்கோடிட்டு காண்பிக்கிறார் - பூர்வாங்க இனமக்களான இஸ்ரவேலருக்கு அந்த நிகழ்வுகள், அவர்கள் கடவுளின் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்ற நிலைப்பாட்டை உண்மையை ஒருவித உறுதியளிக்கிறதாக உள்ளது. அதைத் தொடர்ந்த நிகழ்வுகளில் இஸ்ரவேலர் தங்களைப் பற்றிய பெருமிதம் கொண்டுள்ளதைக் காட்டுவதாக பவுல் விவாதிக்கிறார். வனாந்திரத்தில் இஸ்ரவேலர் மேல் விழுந்த நியாயத்தீர்ப்பு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையார் மேலும் விழுந்து விட்ட ஆபத்தான நிலையை விக்கிரகாராதனைக்காரரோடு உண்டுகளித்த கொரிந்தியக் கிறிஸ்தவர்களும் எதிர்நோக்கும் நிலையில் உள்ளதாகக் காணப்பட்டது.

**வசனம் 3.** தம்மை அவர்கள் மத்தியில் வெளிப்படுத்தும் படியாக, கடவுள் இரண்டு வழிகளைத் தெரிந்து கொண்டிருந்தார் என்பதை கொரிந்தியக் கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தார்கள். விசுவாசத்தில் தொடர்புகொண்டு, மனந்திரும்புவதில் அடித்தளமிட்டிருந்த இந்த ஞானஸ்நானமானது, தமது குமாரனின் தியாகப்பலியின் மூலமாக,

கடவுள் பாவங்களைக் கிருபையினால் மன்னிப்பு அருளுவதில் வெளிப்பட்டது. இஸ்ரவேலர் மோசேயில் ஞானஸ் நானம் பெற்றுக் கொண்ட போது, இஸ்ரவேலின் கடவுளோடுள்ள வாழ்க்கை ஆரம்பமாகிவிட்டிருந்தது. கொரிந்துவில் கிறிஸ்தவர்களுக்கு கடவுளோடுள்ள வாழ்க்கையானது, தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்ட விசுவாசிகள் பாவமன்னிப்பிற்காக தண்ணீரில் மூழ்கிய போது ஆரம்பமாகியது (அப். 2:38; 22:16). ஞானஸ்நானம் என்பதின் ஊடகத்தின் மூலமாகவே கடவுள் இரட்சிப்பிற்கான காரியங்களில் கிரியைசெய்கிறார்.

ஞானஸ்நானத்தோடுகூட, கடவுள் கர்த்தரின் இராப்போஜனத்தையும் திருச்சபைக்கு அருளியிருக்கிறார். அதன்மூலமாக, அவர் கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்தினால் வாழும்படியான அதிகாரத்தையும் வழங்கியுள்ளார். வனாந்திரத்தில் இஸ்ரவேலர் ஞானஸ்நானத்தின் ஒரு மாதிரியை அனுபவத்தில் கண்டதுபோல, அவர்கள் கர்த்தரின் இராப்போஜனத்தில் ஒரு மாதிரியைக் கண்டார்கள். சிவந்த சமுத்திரத்தின் வழியாக வந்தவர்கள் எல்லாரும் **ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள்** என்று பவுல் எழுதினார். இஸ்ரவேலர் மன்னாவினால் போஷிக்கப்பட்டு (யாத். 16:4, 31) கடவுள் கன்மலையிலிருந்து பாய்ந்தோடப் பண்ணின தண்ணீரினால் காக்கப்பட்டார்கள் (யாத். 17:6). அதைப்போன்றே, கடவுள் திருச்சபையை, விசுவாசிகளை ஐக்கியத்தில் கட்டுவிக்கும் ஆவிக்குரிய அப்பத்தினையும் ரசத்தினையும் காத்துக் கொள்கிறார். இது அவர்கள் சிலுவையை நோக்கித் தங்களை பிரதிப்பலித்துக் கொள்வதின் மூலமாகவே ஏற்படுகிறது. யோவான் 6:31-51ல், இயேசு வனாந்திரத்தின் மன்னாவைப் பற்றிக்கூறுகிறார். அந்தப் பகுதியிலுள்ள அவரது மொழிநடை கர்த்தரின் இராப்போஜனத்தை மனதில் கொண்டு வருகிறது. மன்னா இயேசு கிறிஸ்துவின் மாதிரியாகவும் அடையாளமாகவும் காணப்பட்டது. யோவான் 6:35ல் இயேசு சொன்னது, “ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் பசியடைவதில்லை. என்னில் விசுவாசமாயிருக்கிறவன் தாகமடைவது மில்லை.”

**வசனம் 4.** 10:3, 4ல் பவுல் மூன்று தடவைகள் ஆவிக்குரிய (πνευματικός, *pneumatikos*) என்ற வார்த்தையைப் பிரயோகிக்கிறார். இஸ்ரவேலர் ஆவிக்குரிய உணவை உட்கொண்டு, **ஆவிக்குரிய பானத்தைக் குடித்தார்கள்**. அவர்களைப் பின் தொடர்ந்த கன்மலை ஆவிக்குரியதானது. இந்த உரிச்சொல்லில் அப்போஸ்தலன் என்ன பொருள் கொள்கிறார் என்பது தெளிவாகக் காணப்படவில்லை. பேதுரு இந்த வார்த்தையை “எழுத்துப் பிரகாரமானது அல்ல” என்ற பொருளில் பிரயோகிக்கிறார். கிறிஸ்தவர்கள் ஒரு ஆவிக்குரிய வீட்டில் கட்டுவிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுத்துப் பிரகாரமாக,

விலங்குகளைக் கொல்வதற்குப் பதிலாக ஆவிக்குரிய பலிகளை ஏறெடுக்கிறார்கள் (1 பேதுரு 2:5).

பிற எல்லா நிருபங்களும் இணைந்து பொருள் வழங்கினதற்கும் மேலாக 1 கொரிந்தியரில் மேலும் அதிகமான காரியங்களை "ஆவிக்குரிய" என்பதான பொருளில் பவுல் அடையாளம் காண்கிறார். அந்தப்பட்டணத்தின் விசுவாசிகள் மத்தியில் தனது போதனைகள் சேவைகளோடுகூட (9:11) மக்களைப் பற்றி "ஆவிக்குரிய" (2:15) நிலையில் அவர்கள் காணப்படுவதாகக் கூறுகிறார். கொரிந்தியருக்கு ஆவிக்குரிய வரங்கள் உண்டா யிருந்தன (12:1; 14:1). அவர்கள் வரப்போகிற நாட்களில் ஆவிக்குரிய சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும்படியான எதிர் பார்ப்பில் காணப்பட்டார்கள் (15:44, 46). மேலோட்டமாக, ஒரு காரியம் கடவுளின் நோக்கங்களுக்கு எதுவாகச் செயல்படுவதை அப்போஸ்தலன் ஆவிக்குரிய பிரகாரமானது என்று புரிந்து கொண்டிருந்தார். வனாந்திரத்தில் இஸ்ரவேலரோடு கூட வந்த அந்த உணவும், பானமும் சாதாரணமானவை அல்ல. அவைகள் வழங்கப்பட்ட முறையும், அவைகள் நிறைவேற்றிய குறிக் கோள்களும், ஒரு தெய்வீகத் திட்டத்தில் பொருந்துகிறது. எனினும், சில பொழுதுகளில் பவுல் "ஆவிக்குரிய" என்பதின் பதத்தை எழுத்துப்பிரகாரமாக அல்லாமலும் பேதுரு அதைப் பிரயோகித்த மாதிரியில் பிரயோகித்தார். 15:39-50ல் விவாதிக்கப்பட்ட ஆவிக்குரிய சரீரம் மாம்சமும், இரத்தமும் (15:50) என்றில்லாமல் எழுத்துப்பிரகாரமாக இல்லாதபடி உள்ளது. வனாந்திரத்தில் இஸ்ரவேலர் தொடர்ந்த கன்மலை எழுத்துப் பிரகாரமானது அல்லவே.

பவுல் ஆவிக்குரிய உணவு, ஆவிக்குரிய பானம் என்பதோடு நிறுத்தி கொண்டிருந்தாரானால், நாம் அங்கு நிறுத்தம் இன்றித் தொடர்ந்திருப்போம். ஆனால் அவர் மேலும் கூறுவது என்ன வென்றால், **அவர்கள் தங்களைத் தொடர்ந்து சென்ற ஆவிக்குரிய கன்மலையிலிருந்து குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே.** இந்த கூற்றில் அவர் வேதவிளக்கத்தின் ஒரு தனிச் சிறப்பான முறையைப் பிரயோகிக்கிறார். பவுல் பழைய ஏற்பாட்டை உருவகமாக விளக்கப்படுத்தினாரா அல்லது அடையாளமாகவா? கன்மலை எந்த விதத்திலும் இஸ்ரவேலரை வனாந்திரத்தில் தொடரவில்லை என பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. அப்போஸ்தலனின் உறுதி நிலைக்கான ஆதாரம் என்ன? "அந்தக் கன்மலை கிறிஸ்து" என அவர் ஏன் கூறினார்?

கன்மலையின் கற்பனை உருவத்தை இஸ்ரவேலருக்கு அவர் வழங்கிய நன்மைகளின் நிலையான தன்மையோடு இணைத்துக் கொண்டு, David E. Garland சில சாத்தியக்கூறுகளை வரிசைப் படுத்துகிறார்.[2] அவர்களுடைய பயணத்தின் ஆரம்பகாலத்தில் கடவுள்

கன்மலையிலிருந்து தண்ணீரை வெளிப்படப்பண்ணினார். பிரயாணத்தின் இறுதிப் பகுதியிலும் அதைச் செய்தார் (யாத். 17:6; எண். 20:8). கடவுள் தமது மக்களோடு தொடர்ந்து காணப்படுகிறார். இடைப்பட்ட வருடங்களில் அவர்களுக்குத் தேவையான காரியங்களை வழங்குகிறார். கடவுள் ஒரு மாதிரி கன்மலை என்பதான குறிப்பை பவுல் கூறியிருக்கலாம் (உபா. 32:4). அந்த நாற்பது வருடங்களும் அவர் தொடர்ந்து தமது மக்களுக்கானத் தேவைகளை நிவிர்த்தி செய்து வந்தார். மேலும், பவுலும், பிற புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களும் இயேசு தெய்வீகமானவர் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்கள். கடவுள் பழைய ஏற்பாட்டில் நடப்பித்த எல்லாக் காரியங்களிலும், செயலில் ஈடுபட்டுள்ளவராக கிறிஸ்து விளங்குகிறார். தெய்வீகமான இயேசு ஆதியிலேயே கடவுளோடு இருந்ததை அடையாளம் கண்டு கொண்டு, யோவான் தனது நற்செய்தியை ஆரம்பிக்கிறார் (யோவான் 1:1). கடவுள் இஸ்ரவேலரைப் பின் தொடர்ந்து கண்காணிக்க "கன்மலை" என்ற படியாக நோக்கப்படுவாரானால் இயேசு கடவுளாயிருப்பதனால் வனாந்திரத்தில் இஸ்ரவேலரைக் கண்காணித்த கன்மலையைப் போன்றே அவரும் காணப்படுகிறார். பழைய ஏற்பாட்டு உரை மூலத்திலிருந்தும், இயேசுவின் ஆளுமையைப் பற்றியதிலிருந்தும் தாம் அறிந்து கொண்ட பிரகாரமே பவுலின் முடிவுரை காணப் படுகிறது.

**வசனம் 5.** இஸ்ரவேலர் கடவுளிடமிருந்து அபரிதமான ஆழமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள். அவர் அவர்களைத் தமது மக்களாகத் தெரிந்துகொண்டார். சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் ஒரு மாதிரி ஞானஸ்நானத்தை அனுபவித் தார்கள். கடவுள் அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனத்தையும், பானத்தையும் வழங்கினார். ஆயினும் அவர்கள் அவரை விட்டு விலகிப்போனார்கள். ஆகவேதான் பெருந்துன்பம் அவர்களை மேற்கொண்டது. **அவர்கள் வனாந்திரத்தில் தாழ்த்தப்பட்டார்கள்.** இஸ்ரவேலரின் விக்கிரகாராதனையும், அதன் தண்டனையும், கொரிந்தியருக்கு எச்சரிக்கையாகச் சொல்லப்பட்டது. அந்நிய தெய்வ வழிபாடுகளோடு தங்களை இணைத்துக் கொண்ட கிறிஸ்தவர்கள் இஸ்ரவேலருக்கு நேர்ந்ததுபோல கடவுளிடமிருந்து தள்ளிவிடப் படுவார்கள். இந்த விவகாரத்திலும் இஸ்ரவேலர் ஒரு முதன்மை உதாரணமாக விளக்கப்படுகிறார்கள்.

வித்தியாசமான அல்லது விதிவிலக்கு என்பதான சந்தர்ப்பங்கள் என உரிமை கோரி விக்கிரக ஆராதனையும், வேறு எந்த பாவங்களும் மன்னிக்கப்பட முடியாது. ஒரு கள்வன், விபச்சாரி அல்லது பொய்யன் போன்ற அவர்களும் தனது காரியத்தில் அந்தப் பாவச்செயலில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது என்று கூறி கெஞ்சவோ, தப்பித்துக்கொள்ளவோ முடியாது. அறிவு, அன்பு, தேவை என்பதான இந்தக் கருணையான கருத்துகளும் ஒரு பாவச்செயலை

ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக மாற்ற முடியாது. இஸ்ரவேலர் வனாந்திரத்தில் விக்கிரங்களுக்குத் தங்கள் கவனத்தைச் செலுத்தினது கிறிஸ்தவர்கள் விக்கிரகக்கோவிலின் போஜனம் செய்த நோக்கில், இஸ்ரவேலர் இந்தக் கிறிஸ்தவர்களை விட அதிகமாக எதிர்த்து நிற்கவில்லை எனவும் பவுல் எடுத்துக் கூறி விளக்குகிறார். எந்தக் காரண விளக்கங்களும் உரிமை பாராட்ட கூடிய வெளிச்சப்படுத்தலும் விக்கிரகாராதனைக்குச் சமமான வழக்கங்களை, தங்களைப் போன்ற ஆவல் கொண்டுள்ளவர்களோடு பகிர்ந்து கொண்ட ஒரு களங்கமில்லாத போஜனத்தை மாற்றியமைக்க முடியாது.

## "நமக்கான எடுத்துக்காட்டுகள்" (10:6-13)

**6அவர்கள் இச்சித்ததுப்போல நாமும் பொல்லாங்கனான வைகளை இச்சியாதபடிக்கு இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங் களாயிருக்கிறது.
7ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளைளயாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிற படி, 8அவர்களில் சிலர்
விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள். அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக. 9அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை
பார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சை பாராதிருப்போமாக. 10அவர்களில் சிலர்
முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அது போல நீங்களும் முறு முறுக்காதிருங்கள். 11இவைகளெல்லாம்
திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. 12இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று
எண்ணுகிறவன் விழாதப்படிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.
13மனுஷருக்குக் நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.**

அப்போஸ்தலர், இஸ்ரவேலர் விக்கிரகாராதனை என்ற பாவத்தில் விழுந்து போனதின் சரிதையை ஒரு காரண காரியமாகச் சொல்லி விளக்குகிறார். அவர் தனது வாசகங்களுக்கு இரு தடவைகள் முற்கால நிகழ்வுகள் போதனை மதிப்பீட்டைக் கொண்டுள்ளன என்று கூறியுள்ளார். அவைகள் அறிவுறுத்தும் உதாரணங்களாகக்

காணப்படுகின்றன என்றும் கூறுகிறார் (10:6, 11). ஒரு பிரிந்து சென்ற சபையின் அடியிலான நீரோட்டம், பிற காரியங்களில் காணப்பட்டது போல விக்கிரகங்களைக்குறித்த பவுலின் எச்சரிப்பில் விளங்கியது. சிலர் அப்பொல்லோவைக், காட்டிலும் பவுலை அதிகமாக விரும்பினது, பிறமட்டங்களில் காணப்பட்ட பிரிவினைகளை மனதில் கொண்டுவருகிறது. கொரிந்தியரில் சிலர் உயர்நிலையிலுள்ள நாகரீகமான பார்வையாளர்களும், பங்குதாரர்களுமாயிருந்தார்கள். விரிவான சமயம் சார்ந்த காட்சிகளில் அவர்கள் பல தரப்பட்ட செல்வாக்கையும், அரசியல் தொடர்பையும், கல்வியையும் பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பூர்வீக யூதர்கள். ஏழ்மையான ஆரம்பத்திலிருந்த புறஇனத்தவர் இஸ்ரவேலரின் வனாந்திர அலைச்சலைப் பற்றி ஒரளவு அறிந்திருந்துள்ளார்கள். ஆனால் அவைகள் யூத விசுவாசிகளுக்கு புரியும்படியாக அமைந்திருந்ததால், பவுல் அதை நிகழ்காலத் தொடர்பு ஏற்படுத்தினார். கொரிந்துவிலுள்ள சபையின் நிலைமை யூதரின் கட்டுப்பாட்டிலிருந்தது. அவர்கள் யூதர்கள் என்ற முறையில் தங்களை அந்த நகரத்தின் மார்க்கத்தின் கட்டாய நிலைக்குத் தங்களை சரிப்படுத்திக் கொண்டார்கள். கிறிஸ்தவர்களாக மாறுவது, தங்களது பட்டணத்தில் காணப்பட்ட தெய்வங்களோடும் கோவில்களோடும் தாங்கள் இணைந்து செயல்படுவதில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது என அவர்கள் எண்ணங்கொண்டிருந்தார்கள்.

**வசனம் 6.** கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்கு இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனை முறைகள் ஒரு படிப்பினைக்கும் அதிகமாகக் காணப்பட்டது. இஸ்ரவேலின் பாவமும், அதைத் தொடர்ந்து துன்பங்களும், இனி வரப்போகும் சந்ததியாருக்கு உதாரணமாக விளங்கினது. எல்லாரும் விக்கிரகங்களின் வழிபாடுகளுக்கு இணங்கி அதில் அமிழ்ந்து போகவேண்டாம் என்ற எச்சரிப்பு விடுக்கும் வண்ணமாக அது செயல்பட்டது.

**இந்தக்காரியங்கள் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்கு சம்பவித்தது** என அப்போஸ்தலன் எழுதினார். கடவுளின் மக்களின் நடத்தையும், கொரிந்திய சபையாரின் நடத்தையும் அதற்கு மிகவும் இணையாக இருப்பவையெனினும், இஸ்ரவேலுக்கு எச்சரிப்பு விடுக்கும் தன்மையில் போதுமான பிரகாரம் அதற்கு ஏற்றப்படியாக அமைந்துள்ளது. **தீமையான காரியங்கள்** என்பதில் அவர்களின் விக்கிரகாராதானையும், அவர்கள் கடவுளிடம் கீழ்ப்படியாமை காட்டியதின் விளைவாகவும் காணப்பட்டது.

**வசனங்கள் 7, 8.** ஞானஸ்நானம் மற்றும் கர்த்தரின் இராப்போஜனம்[3] இவைகளின் முக்கியத்துவத்தை கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்ள உதவும்படியாக பவுல் பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளை எடுத்துக் கூறுகிறார். அவரது உடனடியான கரிசனை

என்னவெனில், அவரது வாசகர்கள் விக்கிரகாராதனைகளில் ஆபத்தான விளைவுகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பதேயாகும் (காண்க 8:1). **அவர்களில் சிலரைப் போல நீங்களும் விக்கிரகாராதனைக்காரர் ஆகாதிருங்கள்** என்று அவர் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். அப்போஸ்தலன் விக்கிரகாராதனைக் காரர்களுக்கும் εἰδωλολάτραι (*eidōlolatrai*) மற்றும் εἰδωλόθυτον (*eidōlothuton*; 10:19) அல்லது ἱερόθυτον (*hierothuton)* விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைத் தெரிவிக்கிறார். முதலாவதான பதம், இஸ்ரவேலரைக் குறிக்கிறதோ அல்லது கொரிந்தியரைக் குறிக்கிறதோ என்பது தெளிவாக இல்லை, ஆனால் அது விக்கிரங்களை வணங்குகிறவர்களைக் குறிக்கிறது என்பதே உண்மையாகும். மற்ற இரண்டு பதங்களும், தெய்வங்களுக்குப் பலியிடப்பட்ட மிருகங் களின் மாமிசத்தைக் குறிப்பதாய் இருந்தது. இந்த இருபதங்களும் அது பிரயோகிக்கப்பட்ட மார்க்க சடங்காச்சாரங்களினால் அந்த மாமிசம் கறைப்பட்டது என்பதாக அல்லாமல் அந்த மாமிசம் எவ்வாறாகப் பயன்படுத்தப்பட்டது என்பதைக் குறிக்கிறது.

இஸ்ரவேலர் விக்கிரகாராதனையைக் குறித்து எந்த வேடமும் தரித்துக் கொள்ளவில்லை. அவர்கள் **புசிக்கவும் குடிக்கவும் அமர்ந்து விளையாட எழுந்திருந்தார்கள்** என்றே உள்ளது. இதற்கு மாறாக கொரிந்தியரோ, விக்கிரகாராதனைக்கும், அவர்கள் விக்கிரகங் களைத் தொழுத கொள்ளப் பின்பற்றிய செயல்முறையில் உள்ள வித்தியாசத்தைத் திறமையாகக் கண்டுக்கொள்ள முனைந்தார்கள். விக்கிரகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே விக்கிரக ஆராதனைக்காரரா என்று சொல்லப்படலாம் என அவர்கள் விவாதித்தார்கள். இதன் விளைவாக எந்த மாற்றமும் ஏற் படுவதற்கான தேவையை அவர்கள் மறுத்தார்கள். மனந்திரும்புதல் என்பது அவர்களுக்கு வெகுதூரமாகவே காணப்பட்டது; ஏனெனில் அவர்கள் கடவுளுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட குற்றங்களையும், அவர்கள் வாழ்க்கையில் அந்தப் பாவத்தை விலக்கவேண்டும் என்ற தேவையையும் மறுத்தார்கள்.

யாத்திராகமம் 32:6லிருந்து பவுல் சுருக்கமாக எடுத்துப்பயன் படுத்தியுள்ள சிறிய பத்தி, மக்களின் விக்கிரகாராதனையைப்பற்றிக் கூறுகிறது. அதன்படி அவர்கள் "புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்" என்றுள்ளது, விக்கிரகாராதனையும், அறநெறியற்ற வாழ்வும் ஒன்றாகச் செயல்படுகின்றன. அந்த தெய்வங்கள் எகிப்தியர்களுடைய, கிரேக்க, மோவாபிய, அம்மோனிய, எமோரிய தெய்வங்களாக இருந்தாலும் கூட கானானியர் தங்கள் தெய்வங்களுக்கு வெவ்வேறு நாமங்களைச் சூட்டினார்கள். பெயர்களைத் தவிர வளம் தொடர்பான தொழுகை (fertility cults)

முறைகள் அடிப்படையில் அது வேயாகக் காணப்பட்டது. இஸ்ரவேலரைச்சுற்றி வாழ்ந்த மக்களின் தெய்வங்கள் இயற்கையோடு தொடர்பு கொண்டவையாயிருந்தன. அந்நிய தெய்வங்கள் மழையைப் பெய்யப் பண்ணுவதாக மட்டுமல்லாமல், மின்னல் பிரகாசிக்கவும், அவைகளே மழையாகவும், மின்னலாகவும் காணப்பட்டன. பயிர்களின் அறுவடை, ஆட்டு மந்தைகள், மாட்டுமந்தைகள் இவைகளின் பெருக்கம் முதலானவை மக்களின் கடவுள் நம்பிக்கையோடு பின்னிப் பிணைந்திருந்தன. நெறியற்ற வாழ்வும், விக்கிரக ஆராதனையும் கொரிந்து என்ற கிரேக்க நகரத்தில் ஒன்றாக இணைந்து செல்லப்பட்டன (எகிப்திலும், கானான் தேசத்திலும் காணப்பட்டதுபோல). மோசே மலையின் மேல் இஸ்ரவேலர் பரிசுத்த ஜனங்களாகக் குறிப்பிடப்படுவதற்காக நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொள்ளத்தரித்திருந்த போதும், மக்களோ விக்கிரகாராதனையில் வயித்திருந்தார்கள். அதில் நெறிமுறையற்ற வாழ்வும் ஒன்றாகக் காணப்பட்டது.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து தப்பியோடின பிற்பாடு, அவர்களின் வனாந்திர அலைச்சலின் இறுதி எட்டும் நிலையில் (எண். 25), அப்போஸ்தலன் சீனாய் மலையின் விக்கிரககாராதனையின் காட்சியிலிருந்து விலகி, தனது கருத்துப் பொருளாகிறது. மாற்றி அமைத்துக்கொள்ளும் அச்சமயத்தில் அவர்களின் விக்கிரக ஆராதனையிலும், நெறிமுறையற்ற வாழ்விலும், கடவுள் ஒரு கொள்ளை நோயை அவர்களுக்குள் அனுப்புகிறார். ஏறக்குறைய 23,000[4] பேர் இஸ்ரவேல் **ஒரே நாளில்** வீழ்ந்தார்கள்.

**வசனம் 9.** வனாந்திரத்தில் **கர்த்தரை சோதிக்கும்படி** இஸ்ரவேலர் என்னென்ன செய்தார்களோ, அதே விதத்தில் தான் கொரிந்தியரும், தந்திரமாக இயேசுவை சோதித்தார்கள். கிறிஸ்துவின் விக்கிரக்கோவிலில் மாமிசத்தை உட்கொண்ட போது, அவர்கள் இயேசுவை சோதித்தார்கள். வனாந்திரத்தில் சோதனை களை எதிர் காண நேர்ந்த வேளையில், இயேசு உபாகமம் 6:16 யை எடுத்துக் கூறினார், “உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக” (மத். 4:7). அனனியாவும் சப்பீராளும், அவர்கள் கர்த்தரின் ஆவியை சோதிக்கும்படி ஒருமனப்பட்டதினால், சாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள் (அப். 5:9).

இஸ்ரவேலரின் சரித்திரத்தில் காணப்பட்ட, அவர்களின் கலகத்தைப் பற்றிய பல்வேறு சம்பவங்களை பவுல் குறிப்பிட்டுக் காண்பிக்கிறார். சீனாயில் மக்கள் “விளையாட எழுந்தார்கள்” (யாத். 32:6) என்ற வாசிக்கிறோம். பாகால்பேயோரில் அவர்கள் அறவழி தப்பி நடந்தார்கள். அதன் மூலம் 23, 000 பேர் ஒரே நாளில் விழுந்தார்கள் (1 கொரி. 10:8; காண்க எண். 25:9). இஸ்ரவேலரின் விசுவாசக்குறைவு, பல சந்தர்ப்பங்களில் கலகச் செயல்பாடுகளுக்கு வழிவகுத்தது.

இவைகள் எல்லாம் விக்கிரகாராதனையோடு சம்பந்தபடவில்லை. ஆராத் என்ற கானானிய அரசன் தோல்வி கண்ட பிற்பாடு மக்கள் முறுமுறுத்ததினால் அவர்கள் **சர்ப்பங்களினால் அழிக்கப்பட்டார்கள்** (காண்க எண். 21:6). பவுல் கொரிந்துவிலுள்ள தமது வாசகர்களுக்கு மிகத் தெளிவாக, இருதயத்தின் ஆழத்தி லிருந்து கடவுளுக்குக் கீழ்ப்படியும்படியாக வலியுறுத்திக் கூறுகிறார். அவரை சோதிப்பது அழிவை அழைப்பித்து, வரவேற்பதாக உள்ளது.

**வசனம் 10.** கொரிந்தியர் கடவுளை மட்டும் சேவிப்பது என்பது மட்டுமல்லாமல், அவர்மேல் முறுமுறுக்கவும் வேண்டாம் என உள்ளது. “முறுமுறுப்பு” என்பதின் பொருள் பதம் (γογγύζω, *gonguzō*) கொரிந்தியரில் வேறேங்கும் சொல்லப்படவில்லை முடிவற்ற முறுமுறுப்புகள் வனாந்திரப்பிரயாணத்தில் இஸ்ரவேலின் வழக்க முறையாகக் காணப்பட்டது (யாத். 15:24; எண். 14:36; 16:41) . முறுமுறுப்பு அவ்வளவு பயங்கரமான செயலா என்ன? வனாந்திரத்தில் இஸ்ரவேலரின் பாவங்கள் எல்லாவற்றிலும், பட்டியலிடப்படும் வனாந்திர பாவங்களிலும், இது மிகக் குறைந்த தன்மையிலேயே உள்ளது. பவுல் ஏன் குறைசொல்லக் கூடாது ஏனென்றால், விக்கிரகக்கோவிலில் உணவு அருந்த விரும்பினவர் கள் அவருக்கு எதிராக முறுமுறுத்தார்கள். அதைப்பற்றி அவர் கூறியதற்கு இன்னொரு காரணம் என்னவெனில், அவர் கொரிந்து சபையில் ஏற்பட்ட பிரிவினையைப் பற்றி அவர் கேள்விப் பட்டிருந்ததாகும்.

வனாந்திரத்தில் முறுமுறுப்புகளும், அதைக் கொரிந்து பட்டணத்தில் பின்பற்றியவர்களும்; அவர்கள் அழிவு ஏற்படுத்துபவர்கள் **அழிக்கப்பட்டு போவார்கள்** என எச்சரிக்கப்பட்டார்கள். அப்போஸ்தலன் அந்த அழிவு ஏற்படுத்துபவரின் மேலும் அடையாளம் கண்டுக்கொள்ளவில்லை. வாதைகள் எகிப்தில் இறங்கும்முன்பாக கடவுள் இஸ்ரவேலின் வாசல் நிலைகளிலும், சட்டங்களிலும் இரத்தத்தைப் பூசும்படியாகக் கூறினார். கடவுள் எகிப்தியரை அடித்தபோது அவர் அழிவு உண்டாக்குபவர்களை இரத்தத்தினால் பூசப்பட்ட வீடுகளில் அனுமதிக்கவில்லை (யாத். 12:23). அழிப்பவன் என்பது எகிப்திய கடவுளின் நியாயத்தீர்ப்பின் உருவமாகக் காணப்படுகிறது. சங்கீதம் 78:49ல் எகிப்திய கடவுளின் நியாயத்தீர்ப்பின் உக்கிரம், ஒரு அழிக்கும் தூதர்களின் கூட்டதத்துக்கு சமமாகக் கூறப்படுகிறது. நாசம் விளைவிப்பவனை, பவுல் கடவுளிடமிருந்து வேறுபட்ட ஒன்றாகக் காணவில்லை. அந்தப் பதம் கடவுளின் நீதியான கோபத்தின் சொரூபமாகக் காணப்படுகிறது. அதை அவர் விக்கிரககாராதனை. நெறிதவறி நடத்தல், முறுமுறுப்பு, கலகம்செய்தல், இவைகளுக்கெதிராக ஊற்ற எண்ணங்கொண்டார்.

**வசனம் 11.** பழைய ஏற்பாடே முதல் வேதாகமம் ஆகும். அது புறஇனக்கிறிஸ்தவர்களுக்கு, யூத விசுவாசிகளால் அறிமுகப்

படுத்தப்பட்டது. அப்போஸ்தலன் (பவுல்) யூதர்களிடமிருந்தோ, பிற இன வாசகர்களிடமிருந்தோ, அவர் இரண்டாந்தரமாக பழைய ஏற்பாட்டு நிகழ்வுகள் **கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக்காட்டாக** விளங்குகின்றன என்று சுட்டிக்காட்டின போது, எந்த எதிர்ப்பையும் எதிர்காணவில்லை. இந்த சம்பவங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தோடும் செயல்முறைக்கும் **அறிவுறுத்தல்களாக** எழுதி வைக்கப்பட்டுள்ளன என அவர் சொல்கிறார் (காண்க 10:6).

கிறிஸ்துவின் வருகை மட்டும் பழைய எற்பாடு ஒரு புதிராக மூடி மறைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போதே **காலங்களின் இறுதியில்**, சபையானது கடவுளின் வெளிப்பாட்டின் முழு நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதாகக் காண்கிறோம், இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் வேத வசனங்களின் பொருளை வெளிச்சத்தில் கொண்டு வந்தார்கள். கடவுள் ஆசீர்வாதங்களின் பூரணம் கொரிந்தியர்களுக்குச் சொந்தமானது. கடவுளின் எல்லா நோக்கங்களும், எண்ணங்களும் அவர்கள் அனுபவித்த ஆசீர்வாதங்களின் உண்மையாக விளங்குகிறது. அந்த ஆசீர்வாதங்கள் பெரிய பொறுப்புகளோடு வருகை தருகின்றன.

> கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலும், கடவுளின் வலது கரம் நடத்தும் தற்கால ஆளுகையினாலும், கிறிஸ்தவர்கள் மானுட சரித்திரத்தின் முதல் காலத்தில் வாழ்கிறார்கள் என பவுல் உறுதியாக கூறுகிறார். இந்தக்காலத்தின் எல்கைகள் ஒருபுறத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும், பரமேறுதலிலும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினால் இன்னொரு புறத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மானுடரோடு கடவுளின் எல்லா கையாளுதல்களும் பொதுவான வெளிப்பாடுகளின் மூலமாகவும், அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களின் வெளிப்பாடுகள் மூலமாகவும், அவரால் தெரிந்தெடுக்கப் பட்ட மக்களின் வெளிப்பாடுகள் மூலமாகவும் கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஒப்பான காலத்தையே சுட்டுகிறது. முன்னாளைய வேதங்கள் தங்களது இறுதி குறிக்கோளின்; அறிவுறுத்தல்களையும் போதனைகளையும் மேசியாவின் சகாப்தத்தில் வாழுபவர்களுக்கு என்று கொண்டுள்ளதாக பவுல் உறுதிப்படுத்துகிறார்.[5]

**வசனம் 12.** ஆகவே **நிற்கிறவன் என்று தன்னை உணருகிறவன்** விழாதப்படிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் ... என்று பவுல் சில விசுவாசிகளிடம் சொன்னார் என்பதாகக் காண்கிறோம். தன்னைத்தான் சோதித்தறிந்து கொள்ளும்படி கிறிஸ்தவர்கள் யாவரும் அதிலிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது நாம் அறிந்ததே. அப்போஸ்தலர் தனது கண்காணிப்பை உரையாடலின் ஆரம்ப பாகத்திற்கு எடுத்துச் செல்கிறார்: “அறிவு இறு மாப்பை உண்டாக்குகிறது; அன்போ பக்திவிருத்தியை உண்டாக்குகிறது” (8:1). விக்கிரகம் என்ற ஒன்று காணப்படவில்லை என்ற அறிவைக் கொண்டுள்ளவர்கள் விக்கிரகாராதனையில் விருந்துகளில் கலந்து

கொள்ள அவர்களுக்கு வழிசெய்கிறது (8:4); அவர்கள் கிருபையிலிருந்து விழுந்தபோது சத்தியம் என்கிற எச்சரிப்பு, அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது (காண்க கலா. 5:4). தாங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, கர்த்தருடைய இராப்போஜனத் தில் ஒழுங்காகப் பங்கு கொண்டதால், கடவுளோடு தங்களுக்கு நல்ல பங்கும் நித்தியத்திற்கான நிச்சயமும் பாதுகாப்பும் உண்டு என அவர்கள் நினைத்துக்கொள்ளலாம். இதற்கு மாறாக இஸ்ரவேலர் “வனாந்திரத்தில் அழிக்கப்பட்டார்கள்” என்பதை அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்திக் கூறுகிறார் (1 கொரி. 10:5). அவர்கள் கடவுளிடமிருந்து, பெரிய அளவில் ஆசீர்வாதங்களைக் கண்டறிந்திருந்தபோதும் விக்கிரக் கோவில்களின் சடங்காச்சாரங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் போதும் தங்களது இரட்சிப்பை ஆபத்திற்குட்படுத்துகிறார்கள்.

கொரிந்தியர்கள் தாங்கள் விசுவாசத்தில் உறுதியாயுள்ளோம் என்று தங்களை எண்ணிக் கொள்கிறார்கள். இஸ்ரவேலரைக் குறித்த உதாரணத்தைக் கவனமாக ஆராயவேண்டும். அவர்கள் விக்கிரகாராதனையை வெறுத்து விடவேண்டும், ஆனால் அவர்கள் நம்பிக்கை அற்ற நிலையில் இல்லை என்பதையும் அறிந்து கொள்கிறோம். மனிதருக்கு நேரிடுகிற மாமிசப் பிரகாரமான சோதனைகளிலேயே அவர்கள் போராட்டத்தைக் காண்கிறார்கள். வேறு சிலர் தங்களது பாவத்தைக் குறித்து உணர்வடைந்து தங்களது வாழ்வை மாற்றியமைத்துக் கொண்டார்கள். கொரிந்தியருக்கும் அது சாத்தியமே அப்போஸ்தலன் தனது தெய்வீக அதிகாரத்தை இந்தக் காரியத்தில் நிலைநாட்டுகிறார். கடவுள் அவர் மூலமாகப் பேசினார் (2:13).

**வசனம் 13.** கடவுள் வனாந்திரத்தில் அவர்களை சோதித்தார் என்று மோசே அவர்களுக்குப் பின்னர் விவரித்துக் கூறியிருந்தான் (உபா. 8:2, 16). இந்த சோதனைக் காரியத்தில் சிலர் விழுந்து போனார்கள்; வேறு சிலர் பலமடைந்தார்கள். கடவுளின் சோதனை அவர்கள் பொறுத்துக் கொள்ள முடியாத தூரத்துக்கு அவர்களை எடுத்துச் செல்லாது என்ற உறுதிப்பாடு கொரிந்தியருக்குத் தேவையாயிருந்தது. அதன் மூலம் அவர்கள் விசுவாசத்தில் மேலும் பலப்படலாம். சோதனைகள் மிக மோசமாயிருக்கலாம். ஆனால் கடவுள் தமது பிள்ளைகளை இரட்சிக்க வல்லவர். அவர் உண்மையுள்ளவர். கடவுள் கொரிந்துவிலுள்ள தமது மக்களை நேசித்தார். அவர்கள் தங்களுக்கு நேரிடுகிற எந்த விதமான சோதனைகளையும் எதிர்த்து நிற்க முடியும் என்பதை அவர் உறுதிப்படுத்துகிறார். உண்மையுள்ள விசுவாசிகள் மேற்கொள்ளப் பட அவர் அனுமதிப்பதில்லை. கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டுகள் முன்னால் வாழ்ந்த பென் சிராக் என்ற யூத முனி கண்டறிந்தது என்னவென்றால், “கடவுளுக்குப் பயப்படுகிற எந்த மனிதனையும் தீமை

அணுகாது, சோதனைகளிலிருந்து அவர் திரும்பத் திரும்ப இரட்சிக்கிறார்."[6]

## "விக்கிரகாராதனைக்கு விலகி ஒடுங்கள்" (10:14-22)

**14ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஒடுங்கள். 15உங்களைப் புத்திமான்களென்று எண்ணிப் பேசுகிறேன்; நான் சொல்லுகிறதை நீங்களே நிதானித்துப் பாருங்கள். 16நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? 17அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். 18மாம்சத்தின் படியான இஸ்ரவேலரைப் பாருங்கள்; பலிகளைச் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோடே ஐக்கியமாயிருக்கிறார்களல்லவா? 19இப்படி யிருக்க, விக்கிரகம் ஒரு பொருளென்றும் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ? 20அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. 21நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர் களாயிருக்கக்கூடாதே. 22நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா?**

10:1-13ல் சொல்லப்பட்டுள்ள பவுலின் அறிவு பூர்வ விளக்கங்கள் 8:1ல் ஆரம்பித்த விவாதத்தை முடிவடையச் செய்கிறது. விக்கிரகங்களுக்குப் படைத்த உணவிலிருந்து அவர்கள் விலகியிருக்க வேண்டுமென்றில்லாமல் விக்கிரக ஆராதனையிலிருந்து விலகியோட வேண்டும் என்பதையே பவுல் வலியுறுத்தினார் (10:14). தனது வாசகர்களை "சகோதரரே" என்று பவுல் அழைக்கும் போது, 10:14 அதைவிடவும் அதிகமாக அன்பை வெளிப்படுத்துகிற "எனக்கு பிரியமானவர்களே" என்ற சொற்கோவையைப் பிரயோகிக்கிறார். அவர்களைக் கண்டிப்பது அவரது முதன்மை நோக்கமாயிராமல் தனது உடன் கிறிஸ்தவர்களை வழிநடத்தி, எச்சரிப்பதே அவரது முனைப்பாயிருந்தது.

**வசனம் 14.** இஸ்ரவேலரின் எடுத்துக்காட்டை முன்வைத்து, திருச்சபையினர் விக்கிரக ஆராதனையோடு தொடர்புள்ள எதிலும் ஈடுபடக் கூடாது என்ற உறுதியான எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டும்;. விக்கிரகங்களுக்கு படைத்த உணவை உட்கொள்வது,

பாவத்தோடு விளையாடுவது போன்றதாகும். அதை விக்கிரகக் கோவிலில் புசிப்பது பொறுத்துக் கொள்ள முடியாதது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் விக்கிரகத்திற்கு ஒத்துள்ள எதிலுமிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் (காண்க 1 யோவான் 5:21). 1 கொரிந்தியர் 8ல் பவுல் ஏற்கெனவே "ஒரே ஒரு கடவுள் தாம் உண்டு" என்ற அடிப்படை உண்மையை வலியுறுத்தியுள்ளார் (10:23-30ல் அதைத் திரும்ப விவாதிக்கப்போகிறார்). கடவுள் தமது பிள்ளைகள் தம்மை மாத்திரம் தொழுது கொள்ள வேண்டும் எனக் கேட்கிறார். விக்கிரகங்களுக்குச் செய்யப்படும் எந்த சேவையும், கடவுளுக்கு புறமுதுகு காட்டுவதற்கு ஒத்ததாகும்.

**ஆகவே** என்ற பதம் ஒரு உறுதியான இடைச்சொல்லை வெளிப்படுத்துகிறது. தான் வழங்கிய அறிவுபூர்வமான விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டே பவுல் தனது உரையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார் என்பதை இது காட்டுகிறது. இந்தப்பதத்தின் உண்மையான பொருள் அப்படியானால் "எல்லாவிதத்திலும்" (διόπερ, *dioper*) என்ற சொற்கோவையினால் சரியான விதத்தில் விளக்கப்படுகிறது. கொரிந்துவிலுள்ள அறிவு கொண்டவர்கள், தங்களது பழக்கவழக்கங்களை அதன் செல்வாக்கின்படி மதிப்பீடு செய்து கொள்ளவேண்டும். விக்கிரகாராதனையைப் பொறுத்தமட்டில், பவுலின் தீர்ப்பு **எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரகாராதனைக்கு விலகியோடுங்கள்** என்று வெளிப்படுகிறது. வனாந்திர அலைச்சலிலிருந்து, கானானின் பொருள்வளம் பற்றிய வழிபாடுகள் வரை விக்கிரகாராதனை என்பது ஒரு தொடர்ந்து ஏற்பட்ட இடையூறாகவே இஸ்ரவேலருக்குக் காணப்பட்டது. கடவுள் தமது மகிமையை ஒரு விக்கிரகத்தோடு பங்கிட்டுக்கொள்ளமாட்டார். ஒப்புரவாகுதல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. விக்கிர கங்கள் எந்த வல்லமையுமின்றி தங்களது பீடங்களில் அமர்ந்திருக்கின்றன. இதற்கு எதிரிடையாக சங்கீதக்காரன் எழுதுகிறான் "வானத்திலும், பூமியிலும் சமுத்திரங்களிலும் எல்லா ஆழங்களிலும், கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார்" (சங். 135:6). விக்கிரககாராதனைக்கு விலகியோடுவதே பவுலின் வாசகர்களுக்கு முதன்மையான முக்கியத்துவம் பெற்றுள்ளதாக இருக்க வேண்டும்.

**வசனம் 15.** ஒரு ஞானமுள்ள உபாத்தியானதாக பவுல் தனது வாசகர்களுக்கு காரியங்களைக்குறித்து அதனோடே சிந்தனை செய்ய வேண்டும் என்று அழைப்பு விடுவிக்கிறார். நான் சொல்கிறதை நீங்களே **நிதானித்துப் பாருங்கள்** என அவர் அறைகூவல் விடுக்கிறார். கொரிந்தியர் மக்களைப் புரிந்து கொள்கிறார்கள் என அப்போஸ்தலன் அறிந்திருந்தாலும், அவரது வார்த்தைகளின் தேர்வில் ஒருவிதமான வஞ்சப்புகழ்ச்சி எதிரொலிக்கிறதைக் காணலாம். அவர் அவர்களை

**ஞானிகள்** என்று அழைக்கிறார் (φρόνιμοι, *phronimoi*, ஞானமுள்ள மக்கள்; NRSV; ESV). இந்த வார்த்தை அவரது எழுத்துக்களில் நான்கு தடவைகள் மாத்திரமே காணப்படுகிறது.[7] ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அப்போஸ்தலன் அந்தப்பதத்தை சிறிதளவு வஞ்சப்புகழ்ச்சியிலேயே பிரயோகித்தார். அந்தப் பதம் பெரும்பாலான சமயங்களில் “ஞானம்” (σοφός, *sophos*) என மொழி பெயர்க்கப்பட்டு, அவரது நிருபங்களில் பதினைந்து தடவைகள் காணப்படுகிறது (1 கொரிந்தியரில் ஒன்பது தடவைகள்). அது சில பொழுதுகளில் நேர்மறையாக உள்ளது. ஆனால் சிலசமயங்களில் அவ்வாறாக அறியப்பட வில்லை.

கொரிந்துவிலுள்ள சபையில் அவரது கடிதங்கள் வாசிக்கப் படும்போது, பவுல் தனது வாசகங்களில் விவேகத்தைக் கையாள வேண்டும் என அவர் நம்பியிருந்தார். அங்குள்ள கிறிஸ்தவர்கள் எல்லோரும், விக்கிரகக்கோவிலின் பந்தியினால் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை. ஏழைத்தொழிலாளிகளும், அடிமைகளும் இந்த உணவை விரும்பியிருக்கலாம், ஆனால் அவர் கோவிலின் சாப்பாட்டு அறைகளில் உட்காரவோ, அந்நிய தெய்வச்சடங்காச்சாரங்களில் தங்களை இணைத்துக் கொள்ளவோ செய்யவில்லை. இது அக் காலத்தில் செல்வந்தர்கள் மத்தியில் காணப்பட்ட வழக்கமாயிருந்தது. பணவசதி படைத்தவர்கள், தேவையிலுள்ளவர்கள் மத்தியில் காணப்பட்ட சமூக வேறுபாடுகளை நாம் மறுக்க முடியாது. சபையின் அதிக பணவசதி படைத்தவர்கள் பெரும்பாலும் யூதப் பின்னணியிலுள்ள வணிகர்களாயிருந்தார்கள். பவுல், நம் “முற்பிதாக்கள்” (10:1) என்ற குறிப்பிடுவதன் மூலம் இதை அறிந்துக் கொள்கிறோம்.

**வசனம் 16.** அதிகாரம் 8ல் ஆரம்பிக்கப்பட்ட, விக்கிரகங்களின் விருந்துகளில் கலந்து கொள்வது பற்றிய விவாதத்திற்கு பவுல் திரும்புகிறார். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உட்கொள்ளும் அந்தச் செயல் கடவுளுக்கு விரோதமானது என்பது மாத்திரம் இங்கு பொருள்படவில்லை (காண்க 8:8; 10:25). ஆனால் எல்லாரும் அந்தப் போஜனம் புசித்தல் அந்நிய தெய்வத்திற்கு ஜெபத்தோடு தொழுகையோடும் ஒரு விக்கிரகக் கோவிலில் நடைபெறும் சந்தர்ப்பத்தில், அது அந்த தெய்வத்தை வணங்குவதாக அர்த்தங்கொள்கிறது. விக்கிரகம் என்பது ஒரு பொருட்டல்ல என்பதை அறிந்திருந்த சில கிறிஸ்தவர்கள், அவர்கள் அந்த வழிபாட்டின் உணவில் பங்கெடுத்துக் கொள்வது பெரிய தவறல்ல என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பவுல், அந்நிய தெய்வங்களின் சடங்காச்சாரங்களில் ஈடுபடும் எந்த நடவடிக்கையும் அவ்வளவு எளிதாக பொருட்டல்ல என்று ஒதுக்கிவிடமுடியாது எனக் கூறினார். கர்த்தரின் இராப்போஜனத்தில் அவர்கள் பங்குபெறும் அந்தப் பந்திக்கு அவர்களின் கவனத்தை அவர் இழுக்கிறார். **ஆசீர்வாதத்தின்**

**பாத்திரத்தில்** பங்கு பெற்றுக் கொள்வது, **கிறிஸ்துவின் இரத்தத்தில்** பங்கெடுத்துக் கொள்வதற்கு இணையாகும்; **அப்பத்தைப்பிட்டது**, அவரது சரீரத்தை நினைவுகொள்ளும் ஆசரிப்பில் பங்கு கொள்வதாகும் (காண்க 11:24, 25).

**பகிர்ந்துகொள்ளுதல்** ("பங்கு பெறுதல்"; NIV) என்பதில் பவுல் வெளிப்படையாக பொருள்கொள்வது என்னவெனில், (1) கிறிஸ்து வழங்கின ஆசீர்வாதங்களில் பங்கெடுப்பது, (2) அவரது தெய்வீகத் தையும் அவரது சிலுவை மரணத்தையும் அறிக்கையிடுவது (3) அவரது சரீரத்தின் சகோதர, சகோதரிகளோடு ஒரு பொதுவான அறிக்கையை உறுதிப்படுத்துவது. அவைகள் யாவும் உண்மை எனப்படுவதால், ஒரு விக்கிரக்கோவிலின் பந்தியில் பங்கெடுத்துக் கொள்வது, சாதாரணமாக உணவு உட்கொள்வதை விட வித்தியாசமானது என்று விளங்குகிறதல்லவா? ஒரு விக்கிரகத்தின் கோவிலில் பந்தியில் அமர்வதற்கு எதிராக, மிகப்பலமான உற்றுகளை பவுல் வெளியிட்டதில் எந்த அதிசயமும் இல்லை (8:10-13)!

பவுல், அப்பத்திற்கு முன்னதாக பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பதற்கு ஏதாவது முக்கியத்துவம் உள்ளதா? அவ்வாறாக இல்லை என்றே கொள்ளலாம். ஆயினும் பவுல் முக்கியமாக, பாவங்களை மன்னிக்கும் கிறிஸ்து இரத்தம் சிந்துவதையே அதிக முதன்மையாக சிந்தித்துக் கொண்டிருந்தார் என நாம் நம்பிக்கை கொள்ளலாம். இரத்தம் என்பதின் உருவகம் தெளிவாக உள்ளது. மிருகங்களைப் பலியிடுவது பற்றிய எண்ணம், பாத்திரம் என்ற கருத்தை அப்போஸ்தலரின் மனதில் "மீட்கப்பட்ட சரீர"த்தைப் பற்றிய விவாதத்துக்கு முன்னதாகக் கொண்டுவந்து விட்டது. 11:23-26ல் சொல்ப்பட்டுள்ள கர்த்தரின் இராப்போஜனம் பற்றிய கருத்துக்குறிப்புகள் மத்தேயு 26:26-35 மற்றும் மாற்கு 14:17-25 பாகங்களில் சொல்லப்பட்டுள்ள விவரங்களைக் காட்டிலும் அதிகமாக, லூக்காவின் 22:14-20ல் சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கு நன்கு பொருத்தமாக அமைந்துள்ளது. இரவு உணவு என்ற ஒரு வழக்கத்தை கர்த்தர் ஏற்படுத்தியதைப் பற்றிய லூக்காவின் 22வசனத்தில், இயேசு பாத்திரத்தையே முதலாவதாகக் கூறுகிறார் (லூக். 22:17-19). அப்படியாயினும், அப்போஸ்தலன், அந்த ஆசரிப்பை ஒரு முழுமையான நிகழ்வாகவே கொள்கிறார். அப்பம், ரசம் என்பவைகளைப்பற்றி அவர் பேசிய ஒழுங்கு முறைக்கு நாம்அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை.

**வசனம் 17.** கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்போது, விசுவாசிகளின் சரீரம்; ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு, ஒன்றுபடுத்தப்பட்டு, கர்த்தரோடு அது இணைக்கப்படுகிறது. **அநேகரான நாம் அப்பமும் ஒரே சரீரமுமாயி ருப்பதால் அந்த ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறோம் என பவுல் எழுதினார்.** தர்க்கரீதியாக, இதே தத்துவம் விக்கிரகங்களைத் தொழுது

கொள்ளும்போது அதில் பங்கு பெறுகிறவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதோடு அந்த விக்கிரகத்தோடும் ஐக்கியப்படுகிறார்கள் என்று அர்த்தப்படுகிறதல்லவா?

பவுல் கர்த்தருடைய இராப்போஜனத்தின் முக்கியத்துவத்தின் அறிவை, சபைக்குத் தொடந்து வழங்குகிறார். அப்பமும், பாத்திரமும் நினைவு கொள்ளும்படியானது, ஆனால் உணவு மேலும் அதிகமானது. அது ஐக்கியமாயும், ஒருமைப்பாடாகவும் விளங்குகிறது. கூடிவருகிற சபையானது அப்பத்தைப் பிட்டு, பாத்திரத்தில் பானம் பண்ணுகிறார்கள். அதே விசுவாசத்தை அறிக்கையிடுபவர்களின் பௌதீக வாழ்வில் பங்கெடுத்துக் கொள்ளும்போது அந்தத் தனி நபரும் அதில் பங்கு பெறுகிறார்.

அப்பம் பிட்குதலும், பாத்திரத்தில் பானம் பண்ணுதலும் வெறுமையான ஒரு சடங்காகவும், சடங்காச்சாரமாகவும் மாறிப் போகும் நிலையில் கிறிஸ்தவர்கள் தங்களது பிறப்புரிமையைத் தாங்களே கொள்ளையிடுகிறார்கள். ஒரு ஆவிக்குரிய நஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். கூடி வரும் கிறிஸ்தவர்களுக்கு இந்த இராப்போஜனம் ஒரு முக்கியப்பொருள் கொண்ட நிகழ்வாக உள்ளதால் சரீரமாகிய அப்பம் மீட்கப்படும்போது, அதன் பொருள் அடிப்படையாகவே மாறுதலடைகிறது.

**வசனம் 18.** NASBயின் மொழிப்பெயர்ப்பாளர் “இஸ்ரவேலர் மாமிசப்பிரகாரமாக” (’Ισραὴλ κατὰ σάρκα; *Israēl kata sarka*) என்பதை **இஸ்ரவேல் தேசத்தைக்** குறிப்பதாகப் புரிந்து கொண்டார். அது சரி என்றால் பவுல் பௌதீக, சரித்திரப்பிரகாரமாக இஸ்ரவேலருக்கும் ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் மத்தியில் ஒரு எதிர்மறை கருத்துக்கு நேராகச் செல்வதைக் காணமுடிகிறது. மோசேயின் நியாயப்பிரமாணங்களின் கட்டுப்பாட்டில் வாழ்ந்தவர்கள் **பலிகளை உட்கொண்ட** ஆசாரியர்களைக் கொண்டிருந்தார்கள். ஆகவே அவர்கள் பரிசுத்த **மேஜையில் பங்கு பெறு கிறவர்களாயிருந்தார்கள்.** ஆவிக்குரிய இஸ்ரவேலர் அதாவது கொரிந்துவிலும், மற்றெல்லா பகுதிகளிலுமுள்ள சபைகள் அவ்வாறாக பௌதீக பரிசுத்த மேஜையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் பவுல், கிறிஸ்தவர்கள், முக்கியமாக யூதேய சமூகத்தில் குலவேர் கொண்டுள்ளவர்கள், இம்மாதிரியான தொடர்பைக் கண்டுகொள்ள விரும்பினார்.

10:1-11யைத் திரும்பிப் பார்த்த கார்லேண்ட், மாம்சத்தின்படி என்ற சொற்கோவையை, வனாந்திரத்தில் இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனைக்கு தொடர்புபடுத்திக் கூறுகிறார்; எனினும் “பரிசுத்த மேஜையில் பங்கு பெறுகிறவர்கள்” என்ற குறிப்பு, பொதுவான முறையில் வனாந்தர அனுபவத்தைக் குறிப்பாகச் சொல்லாமல், யூத நம்பிக்கையை விளக்குகிறது. இஸ்ரவேலின் தொழுகை, மாமிசத்தின் படியும், விக்கிரகாராதனைக்காரரின் தொழுகையும், இந்த

சந்தர்ப்பத்தில் ஒரே மாதிரியாகவே உள்ளது.[8] இருதரப்பாரும் பரிசுத்த மேஜையின் பலிகளிலும் பங்கு பெறுகிறார்கள். ஆசாரியர் களாலும், பக்தர்களாலும் உட்கொள்ளப்பட்ட மாமிசஉணவு, அந்தத் தெய்வத்திற்குச் செய்யப்பட்ட வணக்கத்தோடு பலமாக இணைக்கப் பட்டுள்ளது.

**வசனம் 19.** விக்கிரகக்கோவில்களின் பலிகளை, எருசலேம் தேவாலயத்தின் பலிகளோடு ஒப்பிட்டுப் பேசும்போது, அந்நிய தெய்வ வணக்கத்துக்கு பவுல் எந்த மதிப்பையும் வழங்கும் எண்ணத்தில் காணப்படவில்லை. அவர் வேகமாக, தனது வாசகர்கள், விக்கிரகங்களுக்குப் பலிசெலுத்தப்பட்ட ஒரு **பொருளோ**, அல்லது ஒரு **விக்கிரகமோ ஒன்றுமில்லை** (காண்க 8:4) என்று எண்ணிக்கொள்ள வேண்டாம் என நினைவுகூருகிறார். அந்நிய தெய்வக்கோவில்களின் ஆசாரியர்களின் பழக்க வழக்கங்கள், ஒரு சில வெளிப்படையான முறையில் யூத ஆசாரியர்களின் பழக்க வழக்கங்களின் சில முறைகளில் ஒத்துக் காணப்படலாம். ஆனால் யூதர்கள் சேவிக்கும் கடவுளின் நிஜரூபம் முற்றிலும் வேறுபட்டதாகும்.

**வசனம் 20.** ஒருவிதமாகச் சொல்லப்போனால் விக்கிரகம் என்பது ஒரு பொருட்டல்ல (8:4), ஏனெனில் விக்கிரகங்களுக்கு எந்த வல்லமையும் கிடையாது. ஆயினும் விக்கிரக வணக்கம் பிசாசுத் தன்மை கொண்டது என்று பவுல் உறுதியாகக் கூறுகிறார். அவர் விக்கிரகங்களைப் பிசாசுகளுக்கு சமமாகக் கூறவில்லையாயினும், விக்கிரகங்கள், உலகில் பிற தீய சக்திகளைப்போன்று, உருவகமாக சாத்தானால் ஏற்படுத்தப்பட்டவை என்று கூறுகிறார். மிகாயா செய்தது போல, தீர்க்கத்தரிசியின் வார்த்தைகளை தீர்க்க தரிசியாகிய சிதேக்கியாவும் அவனோடிருந்தவர்களும் “வஞ்சிக்கும் ஆவி” என்றும், அவர்கள் கடவுளிடமிருந்து விலகிப்போனவர்கள் என்றும் கூறியதை விட அதிகமாக எதுவும் செய்யவில்லை (1 இராஜா. 22:22, 23). மறைநூல்களில் ஒன்றான பாருக்கில் உள்ளதுபோல (c. கி.மு. 175), விக்கிரகங்கள் பிசாசுகளோடு தொடர்புள்ளவைகள் என்பது உண்மையே. பாருக்கின் படைப்பாளர் “நீங்கள் உங்கள் சிருஷ்டி கர்த்தாவை, பிசாசுகளுக்கும், தெய்வங்களல்லாதவைகளுக்கும் பலியிடுவதின் மூலமாக கோபப் படுத்தினீர்கள்”[9] என்று குற்றப்படுத்துகிறார். பவுலின் காலத்திற்கு முன்பாக ஒரு பெரிய பாரம்பரியத்தில், பிசாசுகள் பொய் தெய்வங்களோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

விக்கிரகங்களை வணங்குபவர்கள், பிசாசின் வல்லமைகள் ஆளுகை செய்யும் மேஜையில் பங்கு கொள்கிறார்கள். இஸ்ரவேலர் விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதும் கூட, இஸ்ரவேலின் கடவுளைத் தவிர்த்த வேறு எந்த தெய்வமும் ஒரு சாதாரணமான பெயர் சொல்ல ஏற்றதாக உள்ளது அல்ல, என்ற

நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள். “அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது, அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது அவைகளுக்குக் கண்களிலிருந்தும் காணாது” (சங். 115:4, 5) என சங்கீதக்காரன் சொல்லுகிறார். கடவுளின் மக்கள் விக்கிரகங்களைப்பற்றி, “அறியாமலும், உணராமலும் … காணாமலும்,…” இருக்கிறதாக அறிந்தார்கள் (ஏசாயா 44:18-20). உண்மையான ஒரு தலையே பெயர்: அந்நிய தெய்வங்களின் பலிகளிலும் சடங்குகளிலும் கௌரவப்படுத்தப்பட்டது என்று பவுல் விவாதித்தார். ஏனெனில் விக்கிரகங்கள் கடவுளுக்கு எதிராகக் கிரியை செய்து தீயவனின் ஆவியின் சக்திகளைப் பிரதிபலித்துக் காண்பிக்கின்றன. உருவங்கள் (சொரூபங்கள்) காண்பதற்கான ஒரு காட்சியாகும்; அவைகளை வணங்குபவர்கள் தீமைக்குத் தலைவணங்குவதற்கு ஆதாரமான சாட்சிகளாய் விளங்குகின்றார்கள். கார்லேண்ட் கூறுகிறார், “பவுலின் விவாதத்தின்படி, விக்கிரகங்கள் உயிரற்ற மூலப்பொருட்களிலிருந்து செய்யப்படும் ஊமையான பொருட்களாயிருந்தாலும், அவைகள் ஒரு உண்மை சொரூபத்தின் பிரதி நிதிகளாயுள்ளன. அது மதிப்புள்ள ஒரு அமைப்பாயிருப்பதால் கடவுளோடு நேரடியாகப்போட்டியிடுகிறது.”[10]

கிறிஸ்தவர் ஒருவர் விக்கிரகங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு கோவிலில் உட்கார்ந்து கொண்டு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜனத்தை உட்கொள்ளும்போது, பிசாசுகளின் அதிகாரிகளோடு பங்குதாரர் ஆகிவிடும்படியான அளவில் அவர் விக்கிரகத்தின் பெயரை எடுத்து ஜெபிப்பதற்கு உடன்படும்படியாகத் தன்னை ஒப்புவிக்கிறான் என்று பொருள் கொள்கிறது. அவன் செய்கிற அந்தக் காரியம், எந்த மனதளவிலான கட்டுப்பாட்டினால், மிகப்பெரிய அறிவுக்கு தனது மனதைச் செலுத்துவதாக மாற்றப்படமுடியாது. பவுலின் வார்த்தைகள் நிச்சயமானவைகள். **புற இனத்தவரின் பலிகள், பிசாசானவனுக்குச் செய்யப்படும் காணிக்கைகளாகும்.** அவைகள் கடவுளுக்கு செய்யப்படுபவைகள் அல்ல. அவ்வாறான புற மதசடங்காச்சாரங்களில் தங்களை இணைத்துக் கொள்பவர்கள், அவைகளுக்குப் பங்காளிகளாகிறார்கள். **நீங்கள் பிசாசுகளோடு பங்காளிகளாவதை நான் விரும்பவில்லை** என்றும் பவுல் கூறுகிறார். பவுல் போன்று யோவானும் அந்நிய தெய்வங்களின் உலகைக் குற்றஞ்சாட்டிக் கூறுவது - “அந்த வாதைகளால் சொல்லப்படாத மற்ற மனுஷரால் பேய்களையும், பொன்வெள்ளி, செம்பு, கல், மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும், காணவும், கேட்கவும், நடக்கவும் மாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும், வணங்காத படிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை” (வெளி. 9:20).

**வசனம் 21.** அதிகமான காரணங்காட்டி விளக்குவதற்குப் பிற்பாடு,

ஒரு தீர்மானத்திற்கு வரும்படியான அழைப்பை விடுத்து, பவுல் இக்காரியத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வருகிறார்; கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கு கொண்டு, கிறிஸ்துவோடு பங்கெடுத்துக் கொள்வதையும் பிசாசுகளினால் ஏற்படுத்தப்பட்ட தொழுகைகளில் பங்கெடுத்துக் கொள்வதற்கு இடையிலான தெரிந்துக் கொள்ளுதலைக் கொண்டிருக்க வேண்டும் என அவர் கூறுகிறார். அவரது தீர்ப்பு, தெளிவாக, தீர்மானிக்கப்படும் படியாகக் காணப்பட்டது. இதில் எந்தவிதமான உடன்பாடும் சாத்தியமில்லை: **நீங்கள் கர்த்தரின் பந்தியிலும் பிசாசுகளின் பந்தியிலும் பானம் பண்ணமுடியாது.**

மேகத்தின் கீழான "நமது பிதாக்கள்" எனப் பவுல் கூறுவதும் (10:1), இஸ்ரவேலர் வனாந்திரத்தில் காணப்பட்ட உதாரணத்தை எடுத்துக்கூறுவதும் (10:7-10), யூதர்களில் கிறிஸ்துவிற்கு நேராக மனம் மாறிவந்தவர்கள், விக்கிரககோவில்களில் உண்பதை ஒரு பொருளாதாரத் தேவையாகக் காரணங்காட்டி அர்த்தப் படுத்ததினார்கள் என்பதைச் சுட்டுகிறது. யூதர்கள் என்பதின்படி அவர்கள் எப்போதும் விக்கிரகமானது ஒரு பொருளல்ல என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவர்களான போது, எதுவும் மாற்றம் பெறவில்லை. வர்த்தகத் துறைகளில் அவர்கள் சுறுசுறுப்பாக ஈடுபடவும், அவர்களுடைய தேவைகள் இவ்வாறுள்ள படியால், விக்கிரகக்கோவில்களின் இரவு உணவுகளின் போது அவர்களின் அமர்வது தேவையாயிருந்தது என்றும், அங்கே தான் அவர்கள் வர்த்தகக் காரியங்களைக் குறித்து விவாதிக்கவும், அதற்கான செயல்பாடுகளை நடப்பிக்கும் முடியும் என்றும் கருத்து கொண்டிருந்தார்கள்.

கொரிந்து சபையில், பல்வேறு சமூக பொருளாதார நிலையிலுள்ள மக்கள் தொகுதியிலிருந்து தங்களது அங்கத்தினர் களைக் கொண்டிருந்தவர்களானாலும், தாழ்நிலையிலுள்ள மக்களைவிட அதிகமாக உயர் மட்டத்திலுள்ள மக்கள், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப் புசிக்கும் காரியத்தில் ஒரு முறையான நடத்தையாக, ஒரு பொருளாதார அசைவை அவர்கள் கொண்டிருந்தது மிக சாத்தியமானதே. Wayne A. Meeks கண்டிருக்கிறபடி,

> விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவிற்குத் தடை விதித்தல் செயல்படுத்தப்படுகிற நிலையில் செல்வந்தர்களாக நல்ல வசதி படைத்தவர்களின் (பலமுள்ளவர்கள் எனச் சொல்லப் படுபவர்கள்) வணிகமும், சமூக உறவுகளும் மிக அதிகமாகப் பாதிக்கப்படும். ஏழை மக்கள் இவ்விதத் தடைகளினால் எந்தப் பாதிப்பும் அடையவில்லை. மேலும், ஏழை மக்கள் மாமிச உணவை எப்போதாவது உட்கொள்ளலாம். சமய நம்பிக்கையோடு தொடர்புள்ள நிகழ்வுகளிலும், பொது விருந்துகளிலும் அவர்கள் தரித்து, நம்பிக்கையைத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை அவர்கள் பழக்கமாக்கிக் கொள்வதில்லை." யூதக் கோட்பாடுகளின்

கண்டிப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது.[11]

“அதிக வசதிபடைத்தவர்களை” கிறிஸ்பு (அப். 18:8) சொஸ்தேனே போன்ற யூதர்கள் (அப். 18:17; 1 கொரி. 1:1) கிறிஸ்தவச் செய்தியின் சில காரியங்களில் அதிகமான சுதந்திரமான கொள்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்பதாக உள்ளது. ஆயினும், விக்கிரகங்களுக்குச் சேவை செய்யும் காரியத்தில், பவுலின் வார்த்தைகள் மேலும் அதிகமாகக் கண்டிப்பு நிறைந்ததாக அவர்களுக்கு காணப்பட்டது. “அதிக வசதி படைத்த” புற இனமக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விக்கிரகங்களுடைய தொடர்பை துண்டித்துக் கொள்ளும் காரியத்தில், எந்தப் பிரச்சனையும் காணப்பட்டதாக அறியப்படவில்லை.

**வசனம் 22.** கொரிந்துவின் முதல் கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டபின்பு, நான்கு ஆண்டுகள் கடந்து விட்டிருக்கலாம் (அப். 18:8).[12] புற இன விசுவாசிகள், தீர்க்கதரிசனம், அதன் நிறைவேறுதல் என்பவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பழைய ஏற்பாட்டு பக்தியில்; போதிக்கப்பட்டிருக்கலாம். பாப்பிரஸ் சுருட்கள் அதற்கொத்த வேறு எழுது பலகைகள் குறைவாகக் கிடைக்கப்பெற்றதாலும், அவைகளுக்குச் செலவு அதிகமாயிருந்ததாலும், புறஇன கிறிஸ்தவர்கள் எபிரெய வேதாகமப் பகுதிகளில் நல்ல அறிவு பெற்றிருக்க வாய்ப்பில்லையாகவே காணப்பட்டிருக்கலாம். புராதன இஸ்ர வேலரின் காரியங்களிலும் அவர்களுக்குத் தெளிவான அறிவு கிடைத்திருக்க நியாயமில்லை. அதே சமயம் யூதேய மார்க்கத்தில் தங்களது மூலவேர்களைக் கொண்டிருந்தவர்கள், கர்த்தரை கோபப்படுத்துவது என்ற காரியத்தின் பொருளைப் பற்றிய நல்ல அறிவு கொண்டிருக்க வாய்ப்புள்ளது.

இந்த வாசகத்தில் பவுல் தனது வாசகர்களிடம் கேட்டிருக்கும் திரும்பத்திரும்பச் சொல்லப்படும் இரு கேள்விகளுக்கும் எதிர்மறையான பதிலே எதிர் பார்க்கப்படுகிறது. நிச்சயமாக, நாம் கர்த்தருக்கு எரிச்சல் ஏற்படுத்துவதை விரும்பவில்லை (காண்க உபா. 32:16, 21); நாம் அவரை விட பலவான்களில்லை (காண்க யோபு 37:23; எசே. 22:14) பழைய ஏற்பாடு முழுவதிலும் விக்கிரகாராதனை கடவுளுக்கு எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

## “நியாயப்பிரமாணத்தின்படியானதும் லாபகரமானதும்” (10:23-30)

**[23]எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும்**

**எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. 24ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன். 25கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிக் புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்க வேண்டியதில்லை. 26பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. 27அன்றியும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். 28ஆயினும் இது விக்கிரங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சி யினிமித்தமும் புசியாதிருங்கள்; பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. 29உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல், மற்றொரு வனுடைய மனச்சாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? 30மேலும், நான் அதை ஸ்தோத் தரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்தரித்து அநுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்?**

விக்கிரகக்கோவிலில் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளில் கலந்து கொள்ளுதல் விக்கிரக ஆராதனை என்றும், அது கர்த்தருக்கு எரிச்சலையூட்டுகிறது என்பதையும் பவுல் நிலைப்படுத்தியுள்ளார். மேலும், அவர் அந்தப் பதார்த்தத்தை உண்பதினால் மாத்திரம் பாவம் உண்டாவது அல்ல என்றும், அந்த உணவு நிகழ்வின் மொத்த அமைப்பின் பங்காளிகளாவதில் தான் பாவம் உண்டாகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அப்போஸ்தலன் அவர் கண்டிருந்த ஒரு இரண்டாவது காரணத்தையும் எழுதுகிறார். ஒருவனின் நடத்தை பலவீனமான விசுவாசத்தைக் கொண்டே ஒரு சகோதரனிடம் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய அக்கறையும் அவரிடம் காணப்பட்டது. இது விக்கிரங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை ஒருவர் எங்கிருந்து உட்கொண்டார் என்பதைப் பற்றிய எண்ணத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமலுள்ளது.

**வசனம் 23.** இந்த வசனத்தின் பொருளைக் கூறும் வார்த்தை “சட்டப்படியான” (ἔξεστιν, *exestin*) என்பதாகும். கிறிஸ்து தமது மக்கள் செய்யும்படியாகக் கொடுத்துள்ள அதிகாரம் என்ன? ஏற்றுக் கொள்ளக் கூடிய கிறிஸ்தவ நடத்தையின் எல்கைகள் என்னென்ன? ஒவ்வொரு காரியத்தையும் ஒரு தெளிவான, சுத்தமான முறையில் “சரி” அல்லது “தவறு” என்று பெயரிட்டுக்கூறுவது நமக்கு வசதியாகக்

காணப்படலாம். கிறிஸ்தவ வாழ்க்கையோ அதைவிட அதிகமான சிக்கல் நிறைந்ததாகிவிடுகிறது. குறிப்பான ஒரு பழக்கம் (காரியம், செயல்பாடு) ஒரு சந்தர்ப்பத்தில் குற்றமற்றதாகக் காணப்படலாம்; இன்னொரு சந்தர்ப்பத்திலோ அது குற்றம் நிறைந்து காணப்படலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகள் மிக முக்கிய மானதாகும். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண் பதும் அம்மாதிரியான ஒரு காரியமே.

**எல்லாம் சட்டப்பிரகாரமானது** என்ற கூற்று, **எல்லாக் காரியங்களும் லாபகரமானது** என்ற பொருள் கொடுக்கவில்லை. தனது சகோதரர்களையும் சகோதரிகளையும் நேசிக்கும் கிறிஸ்தவர்கள் தனது செயல்கள் அவர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொள்வார்கள். குறிப்பிட்ட ஒரு நடத்தை கள்ளம் கபடற்றதாயிருந்தாலும், பலவீனமான மனச்சாட்சி கொண்ட ஒருவருக்கு இடறல் உண்டாக்கலாம். விசுவாசத்தில் பலமான கிறிஸ்தவர்கள் கடவுளின் மக்களை உருவாக்க விரும்புகிறார்கள். ஆகவே நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட நடத்தை சரியானதுதான் என்பதான கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டியிருக்கும். சட்டப்படி சரியானதாயிருந்தாலும், சில செயல்கள் சரியானது என்றோ ஏற்றது என்றோ சொல்லப்பட முடியாதிருக்கலாம்.

கிறிஸ்துவின் அன்புக்கு நேராய் மனமாற்றம் பெற்று, தங்களது பாவம் நிறைந்த வாழ்க்கை அமைப்பை விட்டுவிட்ட சிலர் கூட தங்ளை எவ்வாறு நடத்திக் கொள்ள வேண்டும் என்பதைக்காத்துக் கொள்ள வேண்டியது தேவையாயிருக்கிறது. விபச்சாரம், களவு இவைகளை, அவைகளுக்குப் பின்னாக வைப்பது மாத்திரம் போதுமானது அல்ல (காண்க 6:9-11). இயேசு தமது பின்னடி யாளர்களை ஒரு உயர்நிலை வாழ்விற்காக அழைத்திருக்கிறார், முன்பு கூறின "சட்ட அமைப்பு" என்ற சந்தர்ப்பத்தில் பவுல் கேட்டிருக்கிறது "நீங்கள் ஏன் அநியாயத்தை சகித்துக் கொள்கிற தில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்கிறதில்லை?" என்று (6:7) கிறிஸ்தவன் என்பவர் உரிமைகள் என்றபடியாகத் தன்னை அமைத்துக் கொள்வது, கர்த்தர் அமைத்துள்ள எடுத்துக்காட்டுகளின் அறிவு நமக்கு சரியாக அறியப்படாதிருக்கிறதையே காட்டுகிறது.

சட்டப்படியானதா, சட்டத்திற்கு விரோதமானதா என்ற கேள்வி களுக்கு அப்பால், ஒருவர் தனது அயலகத்தாரின் நன்மையை நாடவேண்டும் என்ற பொறுப்பைச் சுட்டிக்காட்டுகிறார். உரிமைகளுக்காகப் போராடுவதோ, அவைகள் நிலைநாட்ட முயல்வதோ எல்லா சமயங்களிலும் ஒரு விசுவாசியின் சரியான வழி முறையாக அமையாது.

**வசனம் 24.** கிறிஸ்துவின் மகிமை கேள்விக்குறியாகக் காணப்படும் சமயங்களிலெல்லாம் கிறிஸ்தவர்களின் நடத்தை

பிறருக்கு ஊறுவிளைவித்த போதெல்லாம், பவுல் **ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் பிறனுடைய பிரயோஜனத்தைத் ...**[13] என்பதை அழுத்தம் கொடுத்துக் கூறுகிறார். விசுவாசி தனக்கானவைகளை மட்டும் நாடவேண்டும் என்று பவுல் கூறும் போது, அவர் தமது வாசகர்களுக்கு, தனக்கே சேவை செய்யும் பழக்கத்தின் வரிசைப் பட்டியலைக் கண்டுபிடித்து, அவைகளைத் தவிர்க்கும் படியாகக் கூறுகிறார். கிறிஸ்தவனின் முதன்மை நோக்கம் தனது லாபம், மதிப்பு, கௌரவம், முக்கியத்துவம் என்பவைகளாக இருக்கக் கூடாது. அதற்குப் பதிலாக, அவன் தனது **அயலகத்தாரின்** லாபம், நன்மை, ஆவிக்குரிய வளர்ச்சி போன்றவைகளை நாட வேண்டும்.

**வசனங்கள் 25, 26.** கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதிய கடிதத்தின் வெவ்வேறு தொகுதிகள் பல்வேறு விசையைக் கொண்டுள்ளன. திருச்சபையில் பிரிவினை காணப்பட்டது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் சிலர் கட்சி என்ற உணர்வில் பிறர் சிலரை விட அதிகமாக பிடிக்கப்பட்டிருந்தார்கள். எல்லா அங்கத்தினரும் கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணும்படியாக உலகப்பிரகாரமான நீதி மன்றத்தை அணுகவில்லை. சகோதரர்களும் அவ்வாறு மதிப்பு மிகுந்த ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய வைராக்கிய சிந்தனையில், காணப்படவில்லை. அதைப்போன்று இந்த எல்லா விசுவாசிகளும், விக்கிரகக்கோவிலில் படைக்கப்பட்ட உணவில் கலந்து கொள்ளும் உரிமையைக் கொண்டாடுவதில் ஒரே மாதிரியான ஆவல் கொண்டிருக்கவில்லை, அந்தக் காரியத்தில், பவுல் முக்கியமாக கிறிஸ்தவர்களாக மாறியிருந்த செல்வந்தர்களான யூத தொழில் நிபுணர்களையும், வணிகர்களையும் கண்டிருக்கலாம், அவர்கள் அந்நிலையிலேயே தங்களது தொழில் முறையான அமைப்புகளில் தொடர்ந்து கலந்து கொள்ள விழைந்திருக்கலாம். அவர்களின் நடத்தையைக் குறித்து பவுல் என்ன சொல்ல வேண்டியிருந்தாலும், அது அவர்கள் கிறிஸ்துவுக்கு நேராய் மனமாறுதல் பெறுவதற்காக முன்பாக தங்கள் உடன் யூதர்களிடமிருந்து கேட்டவைகளைவிட மோசமாயிருக்க முடியாது. அவர்கள் அவரது எதிர்ப்புகளை தாங்கள் ஜெப ஆலயத்தின் அங்கத்தினராக இருந்த போது தாங்கள் பயன்படுத்திய அதே விதமான விடாப்பிடியாக சந்தித்தார்கள்.

பவுலுக்கு முன் வைக்கப்பட்ட தர்க்கம் என்னவெனில், "விக்கிரகமானது ஒன்றுமில்லை" என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இந்தத தெய்வங்கள் காணப்படாதவைகள் என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தபடியினால் விக்கிரகக்கோவிலில் அவர்கள் விருந்துகளில் கலந்து கொண்டிருந்ததை, அவர்கள் தங்களை விக்கிரகாராதனைப்படி குற்றமுள்ளவர்களாகக் கொள்ளவில்லை. ஒரு கிரேக்க தெய்வத்தின் மேடையில் படைக்கப்பட்ட உணவு அந்த

தெய்வத்திற்கே உரியது என்று தர்க்கிக்காமலிருக்க பவுல் மிகக்கவனமாயிருந்தார். அந்த தெய்வம் ஒன்றுமில்லை என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். ஓன்றுமில்லாத ஒரு பொருளுக்கு மரியாதை வழங்குவது தேவையற்றது, ஒன்றுமில்லாத ஒன்றிடம் ஜெபிப்பதும், அதனிடம் கோரிக்கை விடுப்பதும் வெறுமையானது. ஆகவே கிறிஸ்தவனொருவன் சந்தைக்குச் சென்று, அந்திய தெய்வத்திற்குப் படைக்கப்பட்ட மாமிசத்தை அல்லது உணவை விலைக்குப் பெற்றுக் கொண்டானானால், எந்தக் குற்ற உணர்வுமின்றி அவர் அதை உட்கொள்ளலாம். எனினும் விக்கிரகக்கோவிலில் அந்த உணவை உட்கொள்வது தகாதது. இந்தப்பழக்கம், செயல்பாடு, இவைகளைப்பற்றிய சரியான அறிவு பெற்றிராத, பெறவிருப்பமில்லாத கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை பலவீனமாக்கி விடும் எனப் பவுல் கூறினார்.

பல இடங்களில் பரந்து காணப்பட்ட யூதர்களைவிட அதிகமாக, பவுல் விக்கிரகாராதனையை வரையறை செய்வதில் கண்டிப்பாகக் காணப்பட்டார். தம்மைப் போன்ற பிற யூத அப்போஸ்தலரைப் போல அவர் இந்தக் காரியத்தில் அதிகமாகத் தளர்வு காட்டினாரா? **கடையிலே விற்கிற எதையும்** [விசாரியாமலே] **வாங்கிப்புசியுங்கள்** (10:25) என்பதற்கும் “... விக்கிரகங்களுக்குப் படைத்த எல்லா வற்றையும் விட்டு விலகுங்கள்” (அப். 15:29) என்பதற்கும் இடையிலான இழுபறி நன்கு தெரியவருகிறது. எனினும், எருசலேம் சங்கத்தாரின் தடை என்ற சந்தர்ப்பத்தில் அந்த குழு பிறருக்குத் தீர்வு காண உதவுகிறது. அந்தியோகியாவிலுள்ள புறஇனத்தவரும், யூத விசுவாசிகளும் ஒரே சபையாகக் காணப்படவேண்டுமானால், மேஜை ஐக்கியம் ஒரு முக்கியமான காரியமாகும். ஆரம்பத்தில்; இம்மாதிரியான எந்தப்பிரச்சனைகளும் காணப்படவில்லை (கலா. 2:12). ஆனால் எருசலேம் சபையிலிருந்து வந்த பார்வையாளராயிருந்த யூத விசுவாசிகளுக்கு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைக் குறித்த காரியத்தில் அவர்களை நினைப்பூட்டினார்கள். பேதுருவும் பிறரும் அசுத்தமான உணவைத் தவிர்க்கும் எண்ணத்தோடு புற இனத்தவரின் மேஜை ஐக்கியத்திலிருந்து விலகிச் சென்றார்கள். இந்த காரியத்தில் பவுல் பேதுருவுக்கு எதிர்த்து நின்றார். ஆயினும் எல்லோரும் பொதுவான மேஜை ஐக்கியத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்றால்.

அந்தியோகியாவிலுள்ள யூத மற்றும் புற இனக்கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு (காண்க வெளி. 2:14, 20) எருசலேம் ஆலயத்தின் ஆணையை பவுல் உறுதியாக்கி, அதற்குத் துணைநின்றார் (காண்க அப். 15:30; 16:4). ஆனால் அந்தப் பிரச்சினைக் காணப்படாத நிலையில் மாமிசம் அந்நியதெய்வத்தின் மேடையில பலியிடப்பட்டதாயினும் சந்தையில்

அதை விலைக்குப் பெற்றுக் கொள்வதில் அப்போஸ்தலர் அதை ஒரு பிரச்சினையாக காணமுடியவில்லை. கொரிந்துவில் காணப்பட்ட காரியம் யூதா, புற இனக்கிறிஸ்தவர்களின் மேஜை ஐக்கியத்தையும் பற்றியதாக அல்லாமல். விசுவாசத்தில் பலவீனமானவர்களுக்கு இடறல் ஏற்படுத்துவதைப் பற்றியதாயிருந்தது.

"மாமிசம் விற்கப்படும் சந்தை" (μάκελλον, *makellon*) என மொழிபெயர்க்கப்பட்ட பதம் என்பது, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு தடவை மாத்திரம் காணப்படுகிறது. ஆனால் கிரேக்க எழுத்துகளில் கி.மு. 400 முதலே காணப்பட்டிருந்தது. *Macellum* என்ற பதத்தின் லத்தீன் வடிவம் கொரிந்துவின் லெச்சீம் சாலையின் கிழக்காக உள்ள ஒரு சந்தையோடு தொடர்புள்ள ஒரு துண்டு எழுத்துப் பிரதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாமிசம் விற்கப்படும் சந்தையில் கிடைக்கப்பெறும் இறைச்சி பெரும்பாலும், பல்வேறு கடவுள்களுக்கு பலியாகப் படைக்கப்பட்ட மிருகங்கள் மூலமாக வந்ததாகும். பக்தர்களும் கோவில் அதிகாரிகளும் புசித்த பின்[14] மிஞ்சிய இறைச்சி பொது இடத்தில் விற்கப்பட்டது. அவ்வாறாக விக்கிரகாராதனையில் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்ட இறைச்சியை விசுவாசி விலைக்குப்பெற்றுக் கொள்ளும்போது, அதன் கிரயத்தின் ஒரு பகுதி விக்கிரகக் கோவில் பராமரிப்பிற்காகச் சென்றுவிடும், அந்தப் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட காரியம் பவுலுக்கு எந்த விதத்திலும் அக்கறை கொடுக்கவில்லை. விசுவாசி ஒருவன் தான் விலைக்குப் பெற்றுக் கொண்டதின் காரியத்திலிருந்து கிடைக்கப் பெறும் லாபம் எல்லாருக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதற்கான விடையைப் பெற்றுக் கொள்ள இயலாது.

சந்தையில் விற்கப்படும் எந்த இறைச்சியும் (அது படைக்கப்பட்டதாயினும்) கடவுளின் படைப்பின் ஒரு பங்காகவே உள்ளது. ஆகவே அது நல்லதுதான். பொருள் அடிப்படையான காரியங்கள் எந்தவிதமான தீமையையும் சுதந்தரிப்பதில்லை. ஒரு இறைச்சித் துண்டின் சரீரத்தைப் பற்றிய ஆய்வின் மூலமாக எவரும் பரிசுத்தவானாக முடியாது. **பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது** (10:26; காண்க சங். 24:1).

**வசனம் 27.** பவுல் பின்னர் இரண்டாவது காரியத்திற்கு நேராகத் திரும்புகிறார்; பொதுச்சந்தையில் விலைக்குப் பெறப்படுகிற இறைச்சியைப் பற்றிய காரியத்தில் என்ன உண்மையுள்ளதோ, அதுவே **அவிசுவாசி ஒருவனின்** தனிவீட்டில் வழங்கப்படும் இறைச்சியிலும் காணப்படுகிறது. தனி இடத்தில் உண்ணப்படும் இறைச்சி கறையற்றது (அது விக்கிரகத்திற்கு படைக்கப்பட்டதோ, படைக்கப்பட்டதில்லையோ) **உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்** என்று பவுல் கூறினார். இது எந்த குற்ற உணர்வோ, ஒருவரின் மனச்சாட்சிக்கு தவறாகக் காணப்படுவதோ இல்லாத

பட்சத்தில், இதை ஏற்றுக் கொள்ளலாம் எனப் பவுல் கூறினார். அக்கால கிரேக்க உலகில் அறியப்பட்டிருந்ததைப் போன்ற துறவறமுறை அவருக்கு ஏற்றுக்கொள்ளும்படியானதாகக் காணப்படவில்லை என்றே கூறலாம். உணவு, நெறிமுறைதவறாத செயல்பாடுகள் போன்றவற்றைத் தவிர்ப்பதின் மூலமாக ஒருவர் பரிசுத்தனாக ஆகிவிடமுடியாது என்பது உண்மையாகும்.

வெறுமனே மாமிசம் உண்ணும் செயலின்மூலம் ஒரு கிறிஸ்தவர் விக்கிரகத்துக்கு எந்தப் பணிவிடையும் செய்வதில்லை. இந்தக் காரியத்தில் பவுலும் அவரது எதிரிகளும் ஒத்துக்கொண்டார்கள். ஏனெனில் விக்கிரகாராதனை என்பது மனம் மற்றும் இருதயத்தின் ஒரு செயல்பாடாகும். ஆனால் (பவுல்) ஒருவன் சரீர சம்பந்தமாக பொதுச்சடங்குகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்போது, அதாவது விக்கிரகத் தொழுகை செய்யும் காரியங்களில் ஈடுபடும்போது, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், விக்கிரகாராதனை எனத் தோன்றுவதும், விக்கிரகாராதனை என்ற உண்மையும் ஒன்றாகக் கலந்து விடுகின்றன. விக்கிரகாராதனை என்பது வெறுமனே இறைச்சி உண்ணும் ஒரு செயல்பாடு அல்ல என்ற முறையிலும், அது பொது இடங்களில் எல்லாருடைய பார்வை யிலிருந்து காணப்படாமலுமில்லை என்ற படியாகும் போது விக்கிரகாராதனைக்கு சமமாகி விடுகிறது. கிறிஸ்தவனான ஒருவன் விக்கிரகக்கோவிலில் நடக்கும் மார்க்க சம்பந்தச் சடங்குகளில் கலந்து கொள்ளும்போது, அவன்தனது தனிவீட்டில் மாமிச உணவு உண்பதிலிருந்து வெகுதூரம் விலகிப்போகிறார்.

**மனச்சாட்சியினிமித்தம்** (διὰ τὴν συνείδησιν, *dia tēn suneidēsin*) **ஒன்றையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள்** என்று பவுல் விசுவாசிகளிடம் கூறினார். அவிசுவாசிகள் அவர்களை மாமிச உணவு உட்கொண்டதற்காக வெறுத்து விடுவார்கள் என அவர்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தமது வாசகர்களுக்குச் சொல்ல விருப்பங் கொண்டதாகவும் நாம் கொள்ளலாம். விசுவாசி ஒருவன் வெளிப்படையாக சொல்லப்பட்டாலேயன்றி, அவன் தான் விக்கிரகங்களுக்கு பலியாகப் படைத்த மாமிச உணவையே உட்கொள்கிறேன் என்ற பயப்படத்தக்கதான காரணம் எதுவுமில்லை.

“மனச்சாட்சி” (συνείδησις, *suneidēsis*) என்று அப்போஸ்தலர் நடபடிகளில் இரண்டு தடவைகளும், நிருபங்களில் இருபத்தொன்பது தடவையும் சொல்லப்படுகிறது. இந்தப் பதம், கொரிந்தியர் 8-லும், 10லும் எட்டுத்தடவைகள் காணப்படுகிறது. அவைகளில் ஐந்து 10:25-29ல் உள்ளது. கிரேக்க உலகத்தில், “மனச்சாட்சி” என்பது வெட்கம், கௌரவம், என்பதைப்போன்று, ஒருவர் “நல்ல மனச்சாட்சி” யுடையவர் என எண்ணப்பட்டால், அவர் தனது அயலகத்தின் மத்தியில் எந்த

வெட்கக்கேடின்றி காணப்படுகிறார் எனப்பொருள்படுகிறது. கிறிஸ்தவத்தின் முதல் நூற்றாண்டில் "மனச்சாட்சி" என்ற பதம் உருவாகிக் கொண்டிருக்கும் பதமாகக் காணப்பட்டிருந்தது. இந்தக் காரியத்தில் பவுல் இந்தப்பதத்தின் பிரயோகம் இந்தக் கடிதத்தைப் பற்றியதில் மிகக் கடினமான விளக்கத்திற்குரிய கேள்வியாக எழும்பியுள்ளார்.

**வசனம் 28.** மூன்றாவது காரியத்தில், கிறிஸ்தவன் அவிசுவாசி ஒருவனின் வீட்டில் வழங்கப்பட்ட மாமிச உணவைப் புசிப்பதைப் பற்றிய கருத்தை விளக்குவதற்காகத் தொடர்கிறது. அவிசுவாசமான கலாச்சாரத்துக்கும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கும் இடையில் ஒரு பகைமையான உறவு உள்ளதாக பவுல் எண்ணிக்கொள்கிறார். அந்நிய நம்பிக்கை கொண்டுள்ள ஒருவன் கிறிஸ்தவனான ஒருவனை தன்னோடு இரவு உணவில் கலந்து கொள்ளும்படியாக அழைப்பு விடுக்கலாம். இதன் முக்கிய நோக்கம் பிற விருந்தினரின் மனமகிழ்வுக்காக அவனை இகழ்வு படுத்துவதாகக் கூட இருக்கலாம். இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று அந்தக் கிறிஸ்தவனுக்குச் சொல்லப்படும்போது, அவன் என்ன செய்ய வேண்டுமென்பதையும் பவுல் கூறியுள்ளார். கிறிஸ்தவனை தனது இரவு உணவில் விருந்தினராக அழைத்தவன் "**ஒருவன்**" என்பது பெரும்பாலும் அவிசுவாசி ஒருவனையே குறிக்கிறது (10:27).[15] ஒரு சரியான சந்தர்ப்பத்தில், பிற விருந்தினர் முன்பாக, விருந்துக்கு அழைத்தவன் கிறிஸ்தவனிடம் இந்த இறைச்சி **விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது**[16] என்ற தகவலைத் தரலாம். தனது தனிப்பட்ட நேர்மைக்காகவும், அவன் பிரதிபலிக்கும் விசுவாசத்தின் பூரணத்துவத்துக்காகவும் அந்த விசுவாசி அந்த மாமிச உணவு, விக்கிரகங்களைப் பூஜிப்பதற்காக அர்ப்பணிக்கப் பட்டது என்றபடியால், அதோடு எந்த ஈடுபாட்டையும் வைத்துக் கொள்ளக்கூடாது.

அவ்வாறான ஒரு சந்தர்ப்ப சூழலில் கிறிஸ்தவனொருவன் தன்னை மிக அவலமான (இக்கட்டான) சூழலில் காண நேரிடலாம். அந்த மாமிச உணவு விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று அவனுக்குத் தெரிவிக்கப்பட்ட பட்சத்தில் அவன் அதை உட்கொண்டானென்றால், அவன் அந்த அந்நிய தெய்வத்தை அங்கீகரித்ததாக எண்ணப்படும். கிறிஸ்தவர்கள் தங்களது பரிசுத்தமான ஒரே கடவுள் வணக்கத்தை வேறு எதனோடும் ஒப்புரவாக்கிவிடக் கூடாது என்பதை பவுல் அதிகமாக அழுத்தம் கொடுத்துக்கூறினார். அதன் விளைவாக கடவுளை மாத்திரம் வணங்கும் மாதிரியில் அவர்கள் செயல்பட்டு, அவர் மனச்சாட்சியைத் திரும்பவும் மேலுக்குக் கொண்டு வருகிறார் (10:28ல்). அவனுக்குத் தகவல் அறிவித்தவனின் நிமித்தமாக, கிறிஸ்தவன் அந்த உணவை உட்கொள்ளக்கூடாது. விசுவாசி அந்த

உணவை மறுத்து விட்டதால் அந்த வீட்டான் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்?

**வசனம் 29. நான் சொல்கிறேன்** என பவுல் கூறுவது கிறிஸ்தவனான ஒருவனை அவிசுவாசியொருவன் இரவு உணவுக்கு அழைத்து விட்டு, அங்கு மேஜையில் வைக்கப்பட்ட மாமிச உணவின் ஆதாரத்தைப் பற்றிக் கூறிவிட்டால், அந்த அவிசுவாசி அறிவித்ததின் நிமித்தமாக, அவனது "மனச்சாட்சி"யின் நிமித்தமாக, கிறிஸ்தவன் அந்த உணவில் பங்கு கொள்ளக்கூடாது.

அவிசுவாசி கிறிஸ்தவனை இரவு உணவிற்கு அழைப்பது, அந்நாட்களில் காணப்பட்ட வெறுப்புணர்ச்சிகளின் பின்னணியே என்றும், புதிய கிறிஸ்தவ சமயத்தின்மேல் ஏற்பட்ட இகழ்வான எண்ணமே எனவும் பவுல் எண்ணங் கொண்டிருந்தார். அவ்வாறான அழைப்பின் நோக்கம். கிறிஸ்தவனை பொதுவான இடத்தில் காட்சிப்பொருளாக நடத்துவதே என்றும் அவர் கற்பனை செய்தார். கிறிஸ்தவனல்லாதவனின் மனச்சாட்சியைக் குறித்து (பிறர் அவனைப் பற்றிய என்ன மதிப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்ற அவனது அறிந்துணர்வு) விசுவாசி அறிந்திருந்தும் விக்கிரகங் களுக்குப் பலியிடப்பட்ட மாமிசத்தை உட்கொண்டாரானால் மேலும் மெருகூட்டப்படும்.

கிறிஸ்தவன் அந்த உணவை உட்கொள்ளக் கட்டாயப்படுத்தப் படலாம், அல்லது ஒரு பொது இடத்தில் காட்சிப்பொருளாக தன்னையே அவமானத்துக்குள்ளாக்க நேரிடலாம். எப்படியாயினும், விருந்துக்கு அழைத்தவர் விருந்தினர் அந்தக் காரியத்தில் ஒத்துக் கொள்ளவும், தொடர்ந்து அந்தப் போஜனத்தில் பங்கு கொள்ளவும் எதிர்பார்த்திருப்பார். அதற்கு எதிர்மறையாகச் செயல்படும்படி பவுல் அவருக்கு (கிறிஸ்தவனுக்கு) அறிவுரை வழங்குகிறார். அதாவது, தனது சீரிய நிலையை அவர் தெளிவுபடுத்தக் கூறுகிறார். அந்த விருந்திலிருந்து எழும்பி வெளியேறி, விக்கிரகாராதனை குறித்த தனது இகழ்வு மனப்பான்மையைத் தெளிவுபடுத்தவும் வேண்டிக் கூறுகிறார். அவ்வாறாக கிறிஸ்தவன் தன்னை ஒரு நேர்மையான மனிதன் எனக் காட்டும்போது, அந்தத் தகவலை அவனுக்கு அளித்தவரும் வெட்கப்படுவார். அந்த மனிதனின் கூட்டாளிகள் மற்றும் உயர் அதிகாரிகளும் அவனது பொல்லாத தந்திர செயலைக் கண்டு கொண்டதால், அவனது அகங்கார எண்ணமும் தரைமட்டும் தாழ்த்தப்படும். அதன் விளைவாக அவன் மிக மோசமான "மனச்சாட்சி"யைக் கொண்டிருக்க வேண்டியதாயிருக்கும்.

அவிசுவாச நிலையை வெளிப்படுத்தி (γάρ, *gar*, "for") பவுல் இரண்டு கேள்விகளில் முதலாவதானதைக் கேட்கிறார்**- எனது சுதந்தரம் வேறு ஒருவரின் மனச்சாட்சியில் தீர்ப்பு சொல்லப்படுவது எதற்கு?** என்பதாக ஒருவர் அவரை இகழ்வாக எண்ணிக் கொள்ளும் நிலையில்,

அவருக்கு நல்ல மனச்சாட்சியை அளிக்கும் விதமாக, பவுல் அல்லது வேறு ஒரு கிறிஸ்தவனின் சுதந்தரம் என மட்டுப்படுத்தப்படுகிறது? அப்போஸ்தலன் கிறிஸ்தவர்களை தங்களது நம்பிக்கைகளைப் பின்பற்றும்படியாக வலியுறுத்துகிறார். கிறிஸ்தவன் தனது சுதந்தரத்தையும் தியாகம் செய்து, தன்னை விருந்துக்கு அழைத்தவனின் புகழைக் காத்துக் கொள்வது, தனது விசுவாசத்தை ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் ஒப்புரவாக்கிக் கொள்வது போன்றதாகும்.

**வசனம் 30.** பவுல் இவ்வாறு கேட்கிறார் - ... ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக்குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்? **நன்றியறிதலோடு அந்த உணவில் பங்கெடுத்துக்** கொள்ளும் எல்லா உரிமையும் அவருக்கு உள்ள போதிலும்; அந்த விசுவாசி, வழங்கப்பட்ட அந்த உணவு விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட பட்சத்தில், அந்த உரிமை எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த சந்தர்ப்ப சூழலைப்பற்றித் திரும்பத் திரும்ப கேட்கப்பட்ட கேள்விகள் ஒருவிதமான எதிர்ப்புகளாயிருந்தன. ஒரு கிறிஸ்தவனின் சுதந்தரம் ஏன் மட்டுப்படுத்தப்பட வேண்டும்? கடவுளுக்கு நன்றியறிதலோடு அவன் உட்கொள்ளும் உணவைப் பற்றி அவன் ஏன் திறனாய்வு செய்யப்பட வேண்டும்? இந்த கேள்விகளுக்கான பதில் தன்னிலேயே வெளிப்படுகிறது. கிறிஸ்தவனின் சுதந்தரம் இனனொருவனின் மனச்சாட்சியினால் தீர்ப்பு சொல்லப்படக் கூடாது. எனினும், பவுல் ஏற்கனவே விளக்கிச் சொன்ன பிரகாரம் இந்த இரவு உணவின் விருந்தாள் விசுவாசத்தில் ஒத்துப் போவது அல்லது தனது சுதந்தரத்தை விட்டுக்கொடுப்பது, என்ற இரு காரியங்களுக்கு இடையிலான தெரிந்து கொள்ளுவதில் எதிர்காண்கிறார். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில், ஒன்றான மெய்யான கடவுளிடம் அவருக்கு உள்ள விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும் படியாக, அவர் அதை உண்பதற்கு மறுக்க வேண்டியதாகிறது. கிறிஸ்தவ சுதந்திரம் என்பது எல்லாக் கட்டுப் பாடுகளிலிருந்தும் விடுபட்டது என்று அர்த்தங் கொள்வதில்லை.

## “தேவ நாம மகிமைக்காக” (10:31-33)

**31ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 32நான் என் சுய பிரயோஜனத்தைக் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப் படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல; 33நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்.**

சுவிசேஷம் கிரேக்க-ரோம தேசங்களில் பரவினபோது, கிறிஸ்தவர்கள் தொடர்ந்து கூர்ந்து கவனிக்கப்படுகிறார்கள் என்பதை பவுல் உணர்ந்திருந்தார். இழிச்சொல்லும், சண்டை சச்சரவுகளும் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். பவுலின் ஊழியத்தைத் தொடர்ந்த தசம ஆண்டுகளில், உள்ளான போராட்டங்களினாலும், வெளிப்புறத்தின் அழுத்தத்தினாலும் திருச்சபை ஆட்டங்காணத் தொடங்கியது. இரண்டாவது நூற்றாண்டின் இறுதிப்பாகத்தில் தெர்த்துல்லியன் என்ற கார்த்தேஜ் எழுத்தாளன் "கிறிஸ்தவர்கள் சமூகத்தில் எழும்பும் எல்லா அழிவுகளுக்கும் காரணமாயிருக்கிறார்கள்" என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறதாகப் பிராது பண்ணினார்:

> தைபர் நதி பட்டணத்தின் சுவர்களில் உயர எழும்பும்போதும், நைல்நதி தனது தண்ணீர்களை வயல் நிலங்கள் வரை எடுத்துச் செல்லாதபோதும், வானங்கள் மழையைப் பொழியாத போதும், பூமி அதிர்ச்சி ஏற்பட்டாலும், பஞ்சமோ கொள்ளைநோயோ ஏற் பட்டாலும், உடனே எழும்பும் குரல் "கிறிஸ்தவர்களை சிங்கங் களுக்குக் கொடுங்கள்" என்பதாயிருக்கும்.[17]

இந்நாட்களில் உலகச் சூழலில், கிறிஸ்தவர்களாகிய நாம் திரட்டக்கூடிய எல்லா நல்லெண்ணங்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கூடுமான மட்டும், நாம் கடவுளை சந்தோஷப்படுத்தும் விதமாக வாழ்வது போல, நம் அயலாகத்தாரையும் சந்தோஷப்படுத்தும்படியாக வாழ முயல வேண்டும் (காண்க ரோமர் 12:18).

**வசனம் 31.** 8:1ல் ஆரம்பித்த "விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகள்" என்பதான தமது கண்டிப்பை, பவுல் இரண்டு கட்டளைகளின் மூலமாகக் கோர்வையாக எழுதியுள்ளார். **எல்லாவற்றையும் தேவ நாம மகிமைக்காகச் செய்யுங்கள்** என்பதின் முக்கியத்துவத்தைத் தெளிவாக முதன்மைப்படுத்தும் விதமாக, அவை தோன்றுகின்றன. கடவுளை மகிமைப்படுத்துவது என்பதின் நோக்கம், பிசாசுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மேஜையில் புசிப்பதும், குடிப்பதும் என்பதற்கு சற்றும் பொருந்தாதபடியாக அமைந்துள்ளது (10:20, 21) மேலும், விசுவாசி ஒருவன் தனது தனிப்பட்ட உரிமைகளை வலியுறுத்தி, அவனது செயல்களின் விளைவுகளை, குறைந்த அளவில் உணர்த்தப்பட்ட மக்களை, அவர்கள் விசுவாசியானாலும் அவிசுவாசியானாலும் சரி, எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பற்றிய கரிசனையின்றி காணப்படுவது கர்த்தருக்கேற்றப்படி அமையவில்லை. எப்படியும், விக்கிரகங்களுக்குப் பணிவிடை செய்கிறவர்கள் அவர்களது கோவில்களில் கிறிஸ்தவர்கள் **புசிக்கவும் குடிக்கவும்** மறுத்தார்களானால், அது அவர்களுக்கு இகழ்ச்சியாகவே காணப்படும். உணர்வுகளில் தாக்கமடைவதை எல்லாகாலத்தும் தவிர்க்க முடியாது என்பதால், கிறிஸ்தவர்கள் தங்களுக்கும், அவிசுவாசிகளுக்கும்

இடையில் ஒரு தடுப்புச்சுவர் ஏற்படுவதை தடுக்க முயலவேண்டும். மார்ட்டின் லுத்தர் வேதங்களின் விளக்கம் "கிறிஸ்து காலத் தொடர்பு கொள்ளுதல், அவரை முன் கொள்ளுதல்" என்ற தத்துவத்தையே தொகுதிப்படுத்தி அமைந்துள்ளது. இதன் பொருள்? "விசுவாசிகள் எல்லாக் காரியங்களிலும் கடவுளுடைய மகிமைக்காகவே செயல்பட வேண்டும்" என்ற பவுலின் கூற்றுக்கு இணையாகவே உள்ளது.

**வசனம் 32.** சில சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்கள், கடவுள் நாம மகிமைக்காக செயல்படுகிறது அல்லது **யூதர்களுக்கோ, கிரேக்கர்களுக்கோ எந்த இடறலையும் ஏற்படுத்தக்கூடாது** என்பதற்கும் இடையிலான ஒன்றைத் தெரிந்து கொள்வது தேவையாயிருக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில், கடவுளின் மகிமை என்பதற்கே முதன்மை வழங்கப்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் செய்யும் காரியங்களில் ஏதாவதொன்று அவர்களுக்கு இடறலை ஏற்படுத்துவது சாத்தியமே. இடறலான செயல்பாடுகள் தவிர்க்கப்படும் நிலையில், விசுவாசி, "எந்த இடறலும் காணப்படக்கூடாது" என்பதாக தனது மனதை அமைத்துக் கொள்ளவேண்டும். அப்போஸ்தலன் ஆரம்பத்தில் தனது அறிவிற்கு ஏற்பதான விளக்கங்களை விவரித்துள்ளார். கிறிஸ்துவிற்குத் தனது அர்ப்பணிப்பு என்பதின்படியான எல்கையில் பவுல் யூதர்களுக்கு யூதனாக மாறிவிட்டிருந்தார் - "நியாயப்பிரமாணமில்லாதவனுக்கு நியாயப்பிரமாணமில்லாதவனாகவும், பலவீனனுக்கு பலவீன னாகவும்" என்பதின்படியாக இரட்சிப்பின் நிமித்தம் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை எல்லாவிதத்திலும் ஆதாயப்படுத்தும்படியாக, எந்த இடறலுமின்றி வாழ்வதற்காக அவர் முனைப்பு கொண்டிருந்தார் (9:20-23).

**வசனம் 33.** ஒரு பிரசங்கி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர் அவனுக்கு ஆயத்தமாக இருக்கிறாரோ இல்லையோ, அவர் சொல்கிற காரியம் சுவாச செயல்களாலே மதிப்பிடப்படும். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதை, பவுல் தன்னில் தீர்மானித்துக் கொண்டார். 9-வது அதிகாரம் முழுவதிலும் அப்போஸ்தலன் தனது எடுத்துக் காட்டையே சொல்லி விளக்குகிறார். கிறிஸ்தவர்கள் தங்களது உரிமைகளை வலியுறுத்திக்கூறுவது அவர்களது முதன்மையான காரியம் அல்லது என்று அவர் வாதாடுகிறார். அவர் கொரிந்தியரிடம் "ஆகவே என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்கிறேன்" (4:16) என்று துணிந்து கூறுகிறார். சுவிசேஷத்தைக் கேட்பவர்கள், தங்களுடைய போதகர்கள் சுவிசேஷத்தை தங்களுடைய வாழ்விலும் உன்னிப்பாகக் கடைப்பிடிக்கிறார்களா என்ற எதிர்பார்ப்பு கொண்டிருப்பது அறிவிற்கு ஏற்பதாகவே உள்ளது. ஒரு பிரசங்கியின் செயலூக்கம், அவர் தனது சொந்த ஆதாயத்தை நாடாமல், **அநேகருடைய ஆதாயத்தையே,**

**அவர்கள் இரட்சிக்கப்படும் படியாகவே நாடினார்** என்று அவர் கூறுவதின் திறனிலேயே அளவிடப்படுகிறது.

## நடைமுறை பயன்பாடு

### தகுதியான ஆதாயப்படுத்தும் வாழ்வு

"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு, ஆனால் எல்லாம் தகுதியாயிராது" (10:23) என்பதாக பவுல் கூறுவதைக் காண்கிறோம். சில பொழுதுகளில் சொல்லப்பட்ட அல்லது செய்யப்பட்ட காரியங்கள் தொழில் நுட்பம் என்றபடி தவறானதாக இருக்காது, ஆனாலும் இரண்டு வகையான நடவடிக்கையும், அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாகவே காணப் பட்டது. தனது அயலானிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதில், கிறிஸ்தவன் தான் என்ன சொல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தகுதியற்ற காரியங்களை விளக்குவதாகக் காணப்படுகிறது.

கிறிஸ்தவன் தனது பேச்சையும், நடத்தையையும், தகுதிக்கேற்றபடி தீர்மானிப்பதில் உதவி செய்யும் வேறுபாடான தனிச் சிறப்பியல்புகள் மாறிக்கொண்டிருக்கின்றன. ஒரு சிறிய கூட்டத்தார் மத்தியிலோ அல்லது சில நெருங்கிய நண்பர்களிடமோ பிரயோகிக்கப்படும் வார்த்தையும், நடத்தையும் ஒரு பெரிய கூட்டத்தில் பொருத்தமாக அமையாது.

பிறரைப் பற்றிய கரிசனையின் பிரகாரம் தங்களது உரிமைகளை வெறுத்து விடவேண்டும் என்ற தனது வழக்கை விவாதிக்கும் போது, பவுல் ஒரு பொதுவான உண்மையை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறார். அனுமதிக்கப்படக்கூடிய யாவும் ஒருவர் தொழில்நுட்ப அடிப்படையில் எதிர்த்துக் காத்துக் கொள்ளக் கூடிய யாவும், அதைக்கேட்பவர்களுக்கு பக்திவிருத்திக்கான பலனைக் கொடுக்க முடியாது (10:23). அப்போஸ்தலன் முன் வைத்த கொள்கைகள், தனிப்பட்ட அமைப்புகளில் சில வார்த்தைகளையும், செயல்களையும் பத்திரமாகக் காத்துக் கொள்ளும்படியாகக் கிறிஸ்தவனுக்குப் போதிக்கிறது. அனுமதிக்கப் படக்கூடியதும், தகுதியற்றதும் என்பவைகளின் இடையிலுள்ள சமூக வரைகோடுகள் நகரும் நிலையில், கிறிஸ்தவன் ஒரு உயர்மட்ட அளவிலான தனிச் சிறப்பைக் காத்துக் கொண்டு, தகுதியான நடத்தைக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும்.

### மீட்கப்பட்டவர்களுக்கான நிச்சயம்

ஒருங்கிணைப்பு, சமநிலை, காலவரை, உடற்பயிற்சி, ஓட்டப் பந்தய வீரர்கள் இவைகளைக் காண்பிக்கும் சாதனைச் செயல்பாடுகளைக் கண் காணிக்கம் பார்வையாளர்கள் மகிழ்ந்து

கொள்கிறார்கள். ஒரு சாதனைக்காட்சி காணப்படும் ஆபத்து நம்மைக் கவர்ந்திழுக்கிறது. ஒரு வினாடி நேரத்தின் தவறு ஒரு மோசமான காயத்தையோ, மரணத்தையோ ஏற்படுத்தலாம். கொரிந்துவின் கிறிஸ்தவர்களைப் பற்றிய பவுலின் அக்கறை என்னவெனில், அவர்கள் ஆவிக்குரிய மரணத்தை விளைவிக்கும் இக்கட்டான சமயங்களில்; கவலையின்றி காணப்படவேண்டும் என்பதாகும். தடகள விளையாட்டுத் திறமையுள்ளவர்கள் போன்று, கிறிஸ்தவர்கள் எக்காலத்தும் "சுயதிருப்தி" என்பதான ஒரு மாதிரியை முன்காண்கிறார்கள். பயிற்றுவிக்கப்பட்ட திறமைகளை அலட்சியப்படுத்துவது, அது ஒரு தடவையானாலும் அழிவிற்கான ஒரு காரணமாக அமைந்து விடும். சோதனையின் வலிமையை குறைவான அளவில் அனுமானிப்பது, மரணத்தைவிட மோசமான முடிவிற்குக் கொண்டு சென்றுவிடும்.

*மன்னிப்பின் நிச்சயம்.* பாவங்களை மன்னிக்கும் இயேசுவின் அதிகாரத்தை கிறிஸ்தவர்கள் நன்கு அறிந்து, அதனால் பயன் பெற்றுள்ளார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் செய்யப்பட்டு, நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவுகூரும் சிலாக்கியம் கிறிஸ்தவ வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது. பவுல் திரும்பத் திரும்ப இவ்வாறு நிச்சயமளிப்பதான வார்த்தைகள் சொல்வது அவரது கடிதங்கள் முழுவதும்; சிதறிக் காணப்படுகின்றன. ஒரு சகோதரர்களின் குழுவினரை அவர் இவ்வாறு கூறி நினைவில் கொண்டுவருகிறார். "மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர் களாயிருக்கிறீர்கள். அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து விட்டதால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்தினாலே, அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடுகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ. 2:10-12). பிற கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலன், "ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா. 3:27) எனக் கூறுகிறார்.

பாவத்துக்காகப் பரிதவிக்கும் ஒரு விசுவாசி, தன்னை ஞானஸ்நானத்தில் தரித்துக்கொண்டு, ஒப்புக்கொடுத்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார். கடவுளிடமிருந்து தூரமாக்கப்பட்டு, நம்பிக்கையின்றி தவிக்கும் ஒரு பாவி ஞானஸ்நானத்தில், தண்ணீரில் இறங்கி, கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட முடியும். தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, இந்தப் புதிய கிறிஸ்தவர்,

அவருக்கு (கிறிஸ்துவுக்கு) சொந்தமாகிறார்; இழக்கப்பட்டவர் இரட்சிக்கப்படுகிறார்; மரித்தவர் ஜீவனைத் தரித்துக் கொள்கிறார். ஞானஸ்நானத்தில் ஒருவர் புதியவராகப் பிறக்கிறார். கிறிஸ்துவில் அடக்கம் பண்ணப்பட்டு, பழைய மனிதன் மரித்து, புதிய மனிதன் ஒரு வித்தியாசமான சிறப்பான வாழ்வை நோக்கிச் செல்கிறார். கிறிஸ்தவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தின் குடையின் கீழ் நிற்கிறார்கள். மகிழ்ச்சி நிறைந்த வார்த்தைகளால் நாம் பாடுகிறோம், "வல்லமைஉண்டு, வல்லமை உண்டு,[18] அற்புத வல்லமை இயேசுவின் இரத்தத்தில், ... ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்" என்று விசுவாசி மீட்கப்பட்ட மன்னிக்கப்பட்ட மக்களின் ஒரு பகுதியாக உள்ளான் என்கிறதான நிலையான நிச்சயத்தை ஞானஸ்நானம் அருளுகிறது.

இவை எல்லாவற்றையும் பவுல் அறிந்திருந்தார்; கொரிந்தியக் கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தார்கள். கிறிஸ்துவோடு நாம் ஐக்கியப்படுவதின் மறு நிச்சயத்தின் நினைவு கூருதல் ஒரு வலிமையான ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்பதையும் பவுல் அறிந்திருந்தார். சுயதிருப்தி திகிலுண்டாக்குகிறது. கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டு மீட்கப்பட்ட சிலர் தங்களது பழைய பாவவாழ்வுக்குத் திரும்பியதால், கடவுளின் கிருபையிலிருந்து தாங்கள் துண்டிக்கப்பட்டுவிட்டதைக் கண்டார்கள். இஸ்ரவேலர் எகிப்தை விட்டுவந்தபோது அவர்கள் ஒரு விதத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் சமுத்திரத்தின் வழியாகக் கடந்து சென்றபோது, மேகம் அவர்கள் மேல் நிழலிட்டு, அவர்கள் கடவுளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்கள், கடவுள் அவர்களை மீட்டுக்கொண்டார். கொரிந்துவின் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கிரயத்துக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டதுபோலவே, வனாந்திரத்தில் இஸ்ரவேலர் பாவம் செய்தார்கள், கடவுளை கோபத்திற்குத் தூண்டி விட்டார்கள். அப்போஸ்தலனின் ஜெபம், கொரிந்தியர் அந்தப்படியான காரியங்களைச் செய்ய வேண்டாம் என்பதாக இருந்தது.

*கர்த்தரின் இராப்போஜனத்தின் நிச்சயம்.* பவுல் கொரிந்தியருக்கு எழுதின காரியங்கள், மீட்கப்பட்டவர்களுக்கு எப்போதும், அவர்கள் எங்கிருந்தாலும் தொடர்புடையதாக உள்ளது. கர்த்தரின் பந்தியை ஏற்றுக்கொள்வது நினைவு கூருதல் மட்டுமல்லாது, அது ஒரு நிச்சயமளிப்பதாகவும் உள்ளது. ஆவிக்குரிய அப்பத்தைப் புசித்து, ஆவிக்குரிய பானத்தில் பங்கு பெறும்போது, கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவரும், கிறிஸ்துவோடும் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் (10:16). சரித்திரத்தை இஸ்ரவேலருக்குக் கற்பிப்பதற்காகப் பயன்படுத்துவதைத் தொடர்ந்து பவுல் கொரிந்தியர்களை, கடவுள் இஸ்ரவேலருக்கு ஆவிக்குரிய உணவையும், பானத்தையும் வனாந்திரத்தில் கொடுத்தருளினார் என்று

நினைவு படுத்தினார். அது கர்த்தரின் இராப்போஜனம் போன்றது அல்லவெனினும், தத்துவத்தின் பிரகாரம் அது அவ்வளவாக வேறுபட்டுக் காணப்படவில்லை. அப்போஸ்தலர் மேலும் எழுதினதாவது, “எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச்சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்த கன்மலைக்கிறிஸ்துவே” (10:3, 4). கிறிஸ்துவில் காணப் படுவது என்பது, ஞானஸ்நானத்தை விடவும் மேலாக அதிகமான பொருளைக் கொண்டுள்ளது. இந்த அடையாளங்களைப் போன்று முக்கியத்துவம் பெற்றவைகள் ஆவிக்குரிய பெலத்திற்கும் ஏற்றவைகள் ஆகும். அவைகள் அதன் உத்திரவாதமாக அல்லாமல் தேவபக்திக்கான கிணற்று ஊற்றுகளாகும்.

---

குறிப்புகள்

[1]Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians*, The Living Word Commentary (Abilene, Tex.: Abilene Christian University Press, 1979), 123. [2]David E. Garland, *1 Corinthians*, Baker Exegetical Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Baker Academic, 2003), 456-57. [3]Ben Witherington III இந்த வகைப்பாடு பின்வருமாறு விளக்கியது: “கடவுளின் காரியாளர் கடவுளுடைய சரித்திரத்தை வேறுபட்ட காலங்களில் மாற்றியமைக்காத காரணத்தினால், நபர்கள் மற்றும் நிகழ்வுகளை பிற பின்னால் நபர்கள் மற்றும் நிகழ்வுகள் வழங்குகிறது மீட்பு வரலாறை அறிவிக்கின்றன” (Ben Witherington III, *Conflict and Community in Corinth: A Socio-Rhetorical Commentary on 1 and 2 Corinthians* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995], 217). [4]அந்த எண் ஒரு பிரச்சனையை முன்வைக்கிறது. எண்ணாகமம் 25:9ல் உள்ள பதிவு, 24,000 அழிந்துவிட்டது என்று கூறுகிறது. 1 கொரிந்தியர் 10:8ல் அந்த எண்ணையும் மற்றொன்றைச் சரிசெய்யும் முயற்சிகளும் எண்ணற்றவை. ஆனால் அவர்களில் யாரும் திருப்தியுற்றதில்லை. பாகால் பீயரில் கொல்லப்பட்ட மக்களின் துல்லியமான எண்ணிக்கை பவுலின் புள்ளிக்கு விலகியிருந்தது. ஒரு பொறியாளர், ஆயிரம் ஆயிரம் ரசிகர்கள் கவனமாக அளவிட வேண்டும், ஆனால் அத்தகைய துல்லியமான நேரம் தேவையற்ற பெரும்பாலான நேரம். தொலைதூரப்பகுதிகள் பெரும்பாலும் தோராயமாக மைல்களாக அல்லது கிலோமீட்டர்களில் கொடுக்கப்படுகின்றன. பைல் பெளரில் விழுந்த மொத்தம் 23,000 அல்லது 24,000 என்று பைபிள் சரியாக இருக்கிறதா என்று நாம் நம்பிக்கையுடன் இருக்கலாம். [5]Richard E. Oster, Jr., *1 Corinthians*, The College Press NIV Commentary (Joplin, Mo.: College Press Publishing Co., 1995), 236-37. [6]Sirach 33:1 (NAB). The apocryphal book of Sirach is also known as “Ecclesiasticus.” [7]காண்க ரோமர் 11:25; 12:16; 2 கொரி. 11:19. The same Greek word is translated “prudent” in 1 Corinthians 4:10. [8]Garland, 478-79. [9]Baruch 4:7 (NAB). [10]Garland, 480.

[11]Wayne A. Meeks, *The First Urban Christians: The Social World of the Apostle Paul*, 2nd ed. (New Haven, Conn.: Yale University Press, 2003), 98. [12]பவுல் நகரத்தில் ஒரு வருடமும் அரைவாசியும் செலவிட்டார் (அப். 18:11). எருசலேமிலுள்ள அந்தியோகியா (அப். 18:22), ஆசியாவின் பவுல் “மேடான தேசங்கள்” வழியாய்ப் போய் எபேசுவுக்கு வந்தான் (அப். 19:1). கொரிந்துவில் நிலைமைகளைப் பற்றி அறிய எபேசுவில் வந்துசேர்ந்தபின், அது அவருக்கு சிறிது நேரம் எடுத்திருக்கும். அவர் 1 கொரிந்தியர் முன் ஒரு கடிதம் எழுதினார் (காண்க 1 கொரி. 5:11). [13]“தேடு” (ζητέω, *zēteō*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை விவாதமும் சர்ச்சைகளும் அடங்கிய ஒரு வலுவான வார்த்தையாகும். [14]Jerome Murphy-O’Connor, *St. Paul’s Corinth: Texts and Archaeology*, 3rd rev. and exp. ed. (Collegeville, Minn.: Liturgical Press, 2002), 30. சான்றுகளை ஆராய்ந்த

பிறகு, கிரேக்க இறைச்சிக்கான சந்தைகளில் “விற்பனைக்கு வழங்கப்பட்ட அனைத்தையும் விக்கிரக ஆராதனைகளால் மாசுபடுத்தவில்லை” என்று பராமரிக்கப்படுகிறது (Garland, 491-92). [15]R. C. H. Lenski போன்ற பிற விமர்சகர்கள் லென்ஸ்கி, “எவரும்” இன்னொரு சகோதரனை மட்டுமே அர்த்தப்படுத்த முடியும் என்று வாதிட்டார். இந்த பார்வை சரியாக இருந்தால், பலவீனமான/ வலுவான சகோதரர் நிலைமை பரிசீலிக்கப்படும். (R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistles to the Corinthians* [Minneapolis: Augsburg Publishing House, 1937, 421.) [16]பவுலின் εἰδωλόθυτον (*eidōlothuton*; 10:19)லிருந்து ἱερόθυτον (*hierothuton*; 10:28)க்கு மாற்றுவதன் மூலம் வெளிப்படையான முடிவுகளை வரையறுப்பது தவறு. முதலாவதாக, படித்தவர்கள் பாமரர்களால் இகழ்ந்து போயிருக்கலாம் எனக் கருதப்பட்டாலும், சொற்களஞ்சியங்களை அவர் பயன்படுத்தியிருப்பதாக தெரிகிறது. [17]Tertullian *Apology* 40.2. [18]Lewis E. Jones, “There Is Power in the Blood,” *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994), 169.